2017 பெப்ரவரி 07
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 09 · பக்கங்கள் 08 · மணி 03 · ஒளி 022

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY · நவமணி தினபதா

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



சுதந்திரம் என்றால் என்ன? 04»



'ஜெ' மரணத்தில் மர்மமில்லை 08»

அவுஸ்திரேலிய தொடர் தலைமைப் பதவி தரங்கவுக்கு 08»



# ஏப்ரல் மாதத்தில் அமைச்சரவை மாற்றம்

## முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் மாறும்

■ அ. அருண் பிரசாந்த்

தமிழ்- சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் அமைச்சரவையில் சில மாற்றங்களை மேற்கொள்வதற்கு நல்லாட்சி அரசினால் தற்போது தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே, இம்மாதத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்த விடயமானது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சில முக்கியஸ்தர்களின் தலையீட்டின் காரணத்தினாலேயே இவ்வாறு ஏப்ரல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, சாகல ரத்னாயக்க ஆகிய மூவரின் அமைச்சுக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அரசதரப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படிக் கோரிக்கையை ஆராய்ந்து 11 »»»»

## அர்ஜுன மகேந்திரன் பதவி காலத்தில்
## மத்திய வங்கிக்கு ஆறரைக் கோடி நஷ்டம்



■ அ. அருண் பிரசாந்த்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தனது 17 மாத பதவிக் காலத்தில் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களினால் மத்திய வங்கிக்கு 6 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரத்து 616 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் 163 நிதிக்குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் ஒருங்கிணைந்த எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொரளையில் 11 »»»»

## அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், அரிசிக்கான உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, நாட்டரிசி ஒரு கிலோ 70 ரூபாவாகவும், சம்பா ஒரு கிலோ 80 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்படவுள்ளதாக, நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.



## பேரறிஞர் மணவை முஸ்தபா காலமானார்



தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரறிஞர் மணவை முஸ்தபா நேற்று (06) காலை 06 மணியளவில காலமானார். அறிவியல் தமிழ் வளர்ச்சி தொடர்பான பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வந்தவர். இதுவரை அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினி துறை சார்ந்த 8 கலைச் சொற்களைக் கொண்ட அகராதிகளை வெளியிட்டுள்ளார். 11 »»»»

## சைடம் நிறுவனத்துக்கு எதிராக ஜீ.எம்.ஓவுடன் ஜே.வி.பி. கைகோர்ப்பு



■ அ. அருண் பிரசாந்த்

இலங்கையின் வைத்திய துறைக்கும் நோயாளர்களின் உயிருக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருக்கும் சைடம் தனியார் கல்வி நிறுவனத்துக்கு எதிராக அரச வைத்திய சேவை சங்கத்தினருடன் இணைந்து செயற்படவுள்ளதாக ஜே.வி.பி. நேற்று அறிவித்தது.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் வைத்திய கல்வி நிறுவனத்துக்கு வைத்திய பட்டப்படிப்புக்கான அங்கீகாரத்தை வழங்க பூரண அனுமதியுள்ளது என்று நீதிமன்றினால் கடந்த வாரம் தீர்ப்பளிக்கப்பட்டது.

அரசியல்வாதிகள், சமூக ஆய்வாளர்கள், 11 »»»»

## வீசா தடை விவகாரம்
## தடையை நீக்க நீதி மன்றம் மறுப்பு ஜனாதிபதி ட்ரம்புக்கு பின்னடைவு



அமெரிக்காவில் சர்ச்சைக்குரிய விசா விவகாரத்தில் நீதிமன்ற தடையை எதிர்த்து ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் மேன்முறையீடு செய்தது. ஆனால், அதை ஏற்று உடனடியாக தடையை நீக்க மேல்முறையீடு நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சூடான், சோமாலியா, யெமன் ஆகிய 11 »»»»

## மேல் மாகாண ஆசிரியர்களுக்கு உம்றாவுக்காக இரு வார விடுமுறை





முஜிபுர் ரஹ்மான், ஆளுநர் பேச்சில் இணக்கம்

மேல் மாகாணத்தில் உம்றாவை நிறைவேற்றுவதற்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு இருவார விடுமுறை வழங்குவதற்கு மேல் மாகாண ஆளுநர் கே. சி. யோகேஸ்வரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக மேல் மாகாணத்திலிருந்து உம்றாவை நிறைவேற்றுவதற்கு புனித மக்கா செல்வோருக்கு விடுமுறை வழங்குவதில் 11 »»»»

## காலத்தையும் கவனத்தையும் சதிகாரர்கள் வேறு திசையில் திருப்புவதற்கு முயற்சி

■ சுஐப். எம் காசிம்

இனவாதிகளும் சதிகாரர்களும் காலத்தையும் கவனத்தையும் வேறு திசைகளில் திருப்புவதற்கு எத்தனித்து வருவதால் 11 »»»»



" அமைச்சர் றிஷாத் "



## ஆப்கான் – பாகிஸ்தானில் கடுமையான பனிப்பொழிவு

### நூற்றுக்கு மேற்பட்டோர் பலி

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் நிலவுகின்ற கடுமையான பனிப்பொழிவு காரணமாக 100க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக பிராந்திய செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வட பாகிஸ்தான் மற்றும் கிழக்கு ஆப்கானிஸ்தானில் நிலவிவருகின்ற பனிப்பொழிவுடன்கூடிய சீரற்ற காலநிலை காரணமாக வீடுகள் மூடுண்டுள்ளதோடு, வாகன 11 »»»»

## மீண்டும் பயங்கரவாத அச்சம் மஹிந்தவுக்கு பாதுகாப்பு வழங்குக



கம்மன்பில அரசிடம் வலியுறுத்து

■ அ. அருண் பிரசாந்த்

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் 11 »»»»

## மின்னேரிய சு.க. அமைப்பாளர் சூரியாராச்சி பதவி விலகல்

■ ஆதில் அலி சப்ரி



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மின்னேரிய தொகுதி அமைப்பாளர் முன்னாள் பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி அமைப்பாளர் 11 »»»»

## தபால் விவகார அமைச்சுக்கு ஊழியர்கள் காலக்கெடு



■ ஆதில் அலி சப்ரி

தபால் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றைப் பெற்றுத் தருவதற்கு தபால் சேவைகள் அமைச்சருக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்குவதாகவும், குறித்த 11 »»»»

# நுகர்வோரின் நலன்கருதி அரிசி விலையை குறைப்போம்

## நிதியமைச்சர் ரவி

(குருநாகல் இக்பால் அலி)

அரிசியின் வரியைக் 15 ரூபாவால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். 90 ரூபாவுக்கு இருந்த அரிசியை 75 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும். நுகர்வோரின் பாவனைத் தேவையைப் பாதுகாக்கின்ற விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி நியாயமான விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்

கண்டி மல்வத்த விஹாரைக்குச் விஜயம் செய்து மல்வத்த பீடாதிபதியுடனான கலந்துரையாடலின் பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நிதி அமைச்சுப் பதவியிலிருந்து நீங்கள் மாற்றப்படவுள்ளதாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர்களினது ஆலோசனைகளை தவிர ஏனைய அமைச்சர்களினது ஆலோசனைகளைக் கேட்டு எனது கடமைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய எந்த கடப்பாடும் எனக்கு கிடையாது வேலையற்ற நிலையில் பணம் கை நழுவிப் போகுமென்ற மனநிலையில் உள்ளவர்களினது விதண்டாவாத கேள்விகளுக்கும் நான் பதில் கூற வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் செயற்படுவது ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அளித்த வாக்குகளின் பிரகாரம் அந்த அப்பாவி மக்களின் தேவை கருதியே. தற்போது இரு பிரதான கட்சிகளும் இணைந்து இன மத நல்லிணக்கத்தை நோக்கியே பயணம் செய்கின்றது ஊழல் மோசடிகளை இல்லாமற் செய்து நல்லதை நோக்கி மக்களுக்கு பயனுள்ள சேவைகளை வழங்கி வருகின்றோம்.

மற்றும் நுகர்வோருக்கு உகந்த வகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன, வரிச்சுமைகளிலிருந்து மக்கள் ஓரள வேனும் விடுதலைபெற்றிருக்கின்றார்கள்.

எதிரணியினரின் ஆலோசனைக் கேற்ப நாங்கள் செயற்படத் தயாரில்லை. ஜனாதிபதி பிரதமர் ஆகியோரின் ஆலோசனைப் படியே நாங்கள் செயற்படுகின்றோம். எதிர்கட்சியினர் எவ்விதமான சூழ்ச்சிகளை மேற்கொண்டாலும் ஒரு போதும் இந்த ஆட்சியை கவிழ்க்க முடியாது. அரசாங்கத்துக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டை நாசப்படுத்தும் செயற்பாட்டில் எதிர்கட்சியின் சிலர் முயற்சி எடுத்து வருகின்றனர், இது பற்றி நாம் பெரிதாக எதனையும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.



ஊழல் மோசடி விவகாரம் தொடர்பாக உடன் சட்ட நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த காலங்களைப் போல் இது தொடர்பாக பொலிஸ் அழுத்தங்கள் பிரயோகிப்பதில்லை. அது சுயாதீனமாக செயற்படுகிறது. நல்லாட்சிக்குரிய செயற்பாடுதான் காலம் பிற்போட்டு விசாரணைகளை முன்னெடுப்பது. வெள்ளை வேன் போன்று செயற்படுவது அல்ல எனவும் அமைச்சர்அங்கு மேலும் தெரிவித்தார்.

## பேருவளை அல் ஹுமைஸராவில் மாடிக் கட்டட அடிக்கல்நடு நிகழ்வு

(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கி தலைமையில் மிக விமர்சையாக நடைபெறும்.

அமைச்சர்கள் டாக்டர் ராஜித சேனாரத்ன, வே. இராதாகிருஷ்ணன், மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், ஸ்ரீ.ல.சு.கட்சி பிரதம அமைப்பாளர் எம்.எம்.எம். அம்ஜாத், முன்னாள் எம்.பி. அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜயந்த அபேகுணவர்தன, களுத்துறை வலய கல்விப் பணிப்பாளர் ப்ரியாணி முதலிகே, பேருவளை வலய கல்விப் பணிப்பாளர் கா ஸ்ரீலால் விக்ரமஆரச்சி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்வர்.

அடிக்கல் நடும் விழாவினையடுத்து பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் கூட்டமொன்றும் நடைபெறும்.

## பணிஸ் வர்த்தகரிடம் 6000 ரூபா கொள்ளை

(இறக்காமம் நிருபர் ஏ.கே.ஏ. ரஊப்)

பணிஸ் வாகனத்தை ஓட்டி வந்தவரின் வாய்க்குள் பணிஸைப் புகுத்தி ஆறாயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று அம்பாறையில் இடம்பெற்றுள்ளது.

இரவு 8.00 மணியளவில் பணிஸ்விற்று வந்த வாகனத்தை நிறுத்திய சில கொள்ளையர்கள் பணிஸ் வாங்குவது போன்று பாசாங்கு செய்து சாரதியின் வாய்க்குள் பணிசைப் புகுத்தி அவரிடமிருந்து ஆறாயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக அம்பாறை பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சாரதி பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து கொள்ளையர்களைத் தேடி அம்பாறைப் பொலிசார் வலை விரித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் இவ்வருடத்துக்கான தேசியத்தலைவராக தௌபீக் சுபைர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொழும்பு பெரிய பள்ளிவாசல் பொதுச்செயலாளரும் அகில இலங்கை அலவியதுல் காதிரியாவின் இணைச்செயலாளருமான தௌபீக் சுபைருக்கு வை.எம்.எம்.ஏ. பேரவை முன்னாள் தலைவர் சாதிக் சலீம் பேரவையின் பதக்கத்தை அணிவிப்பதையும் அருகில் தேசிய பொருளாளர் சயீத் எம்.றிஸ்வி, தேசிய பொதுச் செயலாளர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் ஆகியோரையும் காணலாம். வை.எம்.எம்.ஏ.யின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் இவ்வருடம் இடம்பெறுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரத்துக்கு உழைத்த முஸ்லிம் தலைவர்களை நினைவு கூருவோம்

(வட்டதெனிய தாலூத்)

பிரித்தானியாவிடமிருந்து இலங்கையின் சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக ஏனைய சமூகத்தலைவர்களுடன் இணைந்து உழைத்த முஸ்லிம் தலைவர்களான ரி.பி ஜாயா வாப்பிச்சி மரைக்கார் மாக்கான் மாக்கார் அறிஞர் சித்திலெப்பை அறிஞர் அசீஸ், போன்றோரை இலங்கையின் 69 ஆவது சுதந்திரதினத்தில் முஸ்லிம்கள் நினைவு கூறல் முக்கயமாகும் என உடுநுவர வட்டதெனிய மொஹிதீன் பள்ளிவாசல் பரிபாலன சபைத்தலைவர் ஜே.ஏ.எம். புவாத் கூறினார்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை கூறிய ஜும்ஆத் தொழுகையின் பின் உரையாற்றிய அவர் ,

சுதந்திரத்தை பெற்றுக்கொண்டதில் முஸ்லிம் தலைவர்களின் பங்கும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது. அதன் காரணமாகவே இலங்கையின் தேசியக்கொடியில் பச்சை நிற ரேகையும் இடம்பிடித்துள்ளது. இதுவே இலங்கையில் நல்லிணக்கத்துக்கும் வித்திட்ட முதலாவது அத்திவாரமாகும் என்றார்.

## அனுமதிப்பத்திரமின்றி விலைப்பட்டியல் விற்பனை செய்த நபருக்கு விளக்கமறியல்

(கிண்ணியா ஏ.ஆர்.எம்.றிபாஸ்)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர் எனக் கூறி, அனுமதிப்பத்திரமின்றி விலைப்பட்டியலை விற்பனை செய்த நபர் ஒருவரை, எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் சமிலா குமாரி ரத்நாயக்க, உத்தரவிட்டார்.

வெளிக்குளம்,வவுனியா பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த நபர், கிண்ணியா - காக்காமுனை பகுதியில், அனுமதிப்பத்திரமின்றி நுகர்வோர் அதிகாரசபையின் உத்தியோகத்தர் எனக்கூறி 800 ரூபாய்க்கு விலைப்பட்டியலை விற்பனை செய்துவந்துள்ளார்.

## போஷாக்கு உணவு வழங்க குருநாகலுக்கு 112 மில்லியன்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் குருநாகல் மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக ரூபா 112 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குருநாகல் மாவட்ட செயலாளர் காமினி இலங்கரத்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்।இந்த வேலைத் திட்டம் ஜனவரி மாதம் முதல் மாவாட்டம் முழுவதும் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நாட்களுக்குள் தாய்மார்கள் போசாக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அந்த நிவாரண போசாக்கு உணவைப் பெற்றுக் கொள்வதிலிருந்து அவர்கள் இடை நிறுத்தப்படவுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹம்பாந்தோட்டை முஸ்லிம் லீக் முன்னணிகள் சம்மேளன புனரமைப்புக் கூட்டம்

ஹம்பாந்தோட்டை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் இம்மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாயத்தில் நடைபெறும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி அல்ஹாஜ் பீ.எம் பாரூக் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். சம்மேளனத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர் எம்.இஸட்.எம் இர்பான் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். சம்மேளனத்தின் செயலாளர் எம் அஜிவதீன் உட்பட தலைமையகத்தின் பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்வார்கள். மேலதிக விபரங்களுக்கு 0714467112 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஹம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர் எம்.இஸட்.எம் இர்பான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கல்குடா கிளை, இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்க கல்குடா கிளை மற்றும் 'சுறக்கிமு சிறீலங்கா' அமைப்பு என்பன இணைந்து இலங்கையின் 69வது சுதந்திர திணத்தினை நினைவு கூரும் முகமாக நடத்திய இரத்ததான நிகழ்வு ஓட்டமாவடி ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாதுகாப்பு படையினர் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டு இரத்ததாணம் வழங்கினர். - முஹம்மது றாபித்

## வாசகர் கடிதம்

### புறாக்கள் வாழும் புழுதிவயல் மருந்தகம்

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புழுதிவயல் மத்திய மருந்தகத்தில் 2005.05.30ஆம் திகதி திறக்கப்பட்ட பல் சிகிச்சை நிலையம் மிகவும் மோசமாக பழுதடைந்து உள்ளது. மேல் கூரையில் புறாக்கள் வசிப்பதால் அதன் எச்சங்கள் பல் சிகிச்சை அறைக்குள் விழுவதோடு, துர்வாடையும் வீசுகிறது. அதனால் பல் வைத்திய அதிகாரிகளுக்கும் பல் சிகிச்சை பெற வருபவர்களுக்கும் மிகவும் கஷ்டமாக உள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களின் வைத்திய நிலையம் புத்தளத்தில் இயங்கி வரும் (I.S.R.C) யால் சுமார் 20 இலட்சம் நிதியொதுக்கீட்டில் கட்டப்பட்டது. தற்பொழுது பெய்யும் மழையினால் வைத்திய நிலையத்தின் கூரையிலிருந்து நீர் வடிகிறது. வைத்திய நிலையத்திற்குள் நீர் தேங்கி நிற்பதால் கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் அச்சத்துடன் நடமாடுகிறார்கள். தயவு செய்து இந்த இரு நிலையத்தையும் உடனடியாக திருத்தித் தருமாறு சுகாதார அதிகாரியிடம் வேண்டுகின்றேன்.

ஏ. அமானுல்லா, புத்தளம்.

### மட்டக்களப்பு புகையிரத நேரசூசி மாற்றப்படுமா?

மட்டக்களப்பில் இருந்து புறப்படும் புகையிரதங்களில் காலை 6.20க்கு புறப்படும் உதயதேவி புகையிரதமும் ஒன்று. இது சரியாக மட்டக்களப்பில் இருந்து காலை 6.20க்கு கொழும்பை நோக்கி புறப்படுகிறது. இப்புகையிரதத்தில் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரயாணிகள் அதிகமாக பயணம் செய்கின்றனர். இவர்கள் தங்களின் பயணத்தை மேற்கொள்வதற்காக புகையிரத நிலையத்திற்கு வருகை தருவதற்கு கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் தொடக்கம் இரண்டு மணித்தியாலங்கள் செல்ல வேண்டியுள்ளது. தூரப்பிரதேசமான கல்முனை அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற இடங்களில் இருந்து வருவதற்குள் பஸ் போக்குவரத்துப் பிரச்சினையால் குறிப்பிட்ட 6.20க்கு வந்து சேருவதற்குள் புகையிரதம் புறப்பட்டு விடும்.

எனவே, அதிகமாக புகையிரத திணைக்களத்திற்கு வசூலைச் சம்பாதித்துக் கொடுக்கும் மட்டக்களப்பு - கொழும்பு புகையிரத சேவையின் உதய தேவி புகையிரத நேரசூசியை காலை 7.20க்கு மாற்ற ஆவன செய்யுமாறு மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிபரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கின்றேன்.

- காத்தநகர், கலீலுர் றகுமான்

### அளவ்வ பம்பரகல பாதையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பம்பரகல ஊடாக ஹங்கவத்த செல்லும் பாதையில் தார் கழன்று பெரும் குன்றும் குழியும் காணப்படுவதால் பொது மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தப் பாதையில் சோதாபாலுவி என்ற இடத்தில் கடுமையான குழிகள் காணப்படுவதால் அவ்விடத்தில் பயணம் செல்பவர்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குவதாகச் பிரதேச வாசிகள் சுட்டிக் காட்டுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இக்பால் அலி.

பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.
வாசகர் கடிதம்
நவமணி
156, ஆஸ்பத்திரி வீதி,
தெஹிவளை.

# மக்களுக்கு இலவச எல்.ஈ.டி. மின்குமிழ்கள்



மாதத்தில் மின்சாரத்தை 60 திற்கும் குறைவாக பாவனை செய்யும் உள்ளக நுகர்வோர் மக்களுக்கு இலவசமாக எல்.ஈ.டி. மின்குமிழ்களை வழங்குவதற்கு மின்சாரசபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு கொடுக்கப்படும் மின்குமிழ்களுக்கான பணத்தை மின்கட்டணத்தில் இணைத்துகொள்ளப்படுவதில்லை என்றும், குறித்த நுகர்வோர் குறைத்துகொள்ளும் மின் பாவனை அறவிலிருந்தே குறைத்து கொள்ளப்படும் என மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இதன்போது உயர்தரமான எல்.ஈ.டி மின்குமிழ்களே வழங்கப்படவுள்ளதோடு, 3 வருடகால உத்தரவாதத்தையும் இதன்போது பெற்று கொடுக்கவுள்ளது.

எதிர்வரும் வரட்சி கால நிலையை எதிர்கொள்வதற்கு மற்றும் மின்சாரத்தை தொடர்ந்து மக்களுக்கு வழங்கவும் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் மின்சக்தி அமைச்சர் குறிப்பிட்டார்.

# இலவசக் கல்வியை வலுப்படுத்தும் திட்டங்களுக்கு அரசு புது உத்வேகம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன





நாட்டில் இலவசக் கல்வியைப் வலுப்படு த்துவதற்கு அனைத்து அரசாங்கங்களும் முன்னெடுத்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தற்போதைய அரசாங்கம் புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பரிசளிப்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

ஒரு நாட்டில் கற்றவர்கள் அதிகரிப்பதன் மூலம் அந்நாடு துரிதமாக அபிவிருத்தி அடையும். பிள்ளைகளை புதிய தொழில் நுட்ப உலகுடன் இணைத்து எதிர்பார்க்கும் வெற்றியை நோக்கி அவர்களை வழிநடத்த தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. கீர்த்திமிகு வரலாற்றுச் சிறப்புடன் 140 ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் முன்னேற்றத்தைப் பாராட்டுகின்றேன். எதிர்காலத்தில் மேலும் பல கல்விமான்களை இக்கல்லூரி நாட்டுக்கு வழங்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இதற்கு முன்னர் டெங்கு நோய் ஒழிப்பு நிகழ்த்திட்ட மொன்றில் கலந்து கொள்வதற்காக கல்லூ ரிக்கு வருகை தந்திருந்தேன். டெங்கு நோயை ஒழித்துக்கட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு பாடசாலை பிள்ளைகள் முதல் அனைத்து பிரஜைகளினதும் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்குத் தேவை. டெங்கு நோய் குறித்து இன்று சிலர் பல்வேறு விடயங்களை முன்வைக்கின்ற போதும் டெங்கு நுளம்புகளை ஒழிப்பது இன்று உலகிற்கு சவாலாகவே உள்ளது. பூகோள வெப்பமயமாதலுடன் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்தினால் உருவாகும் டெங்கு நுளம்பு காரணமாக உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளும் பாரிய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளது என குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, பாடசாலை அதிபர் ஏ.ஜே.பிரணாந்து, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பிள்ளையானுக்கு 20 வரை விளக்கமறியல்



மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று குறித்த வழக்கு விசாரணை எடுத்துகொள்ளப்பட்ட போதே மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க உத்தரவிட்டார். இவர்,15 மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு, 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத்துறை தலைமையகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திற்குள் வைத்து நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தநிலையில், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்னை பிணையில் செல்ல அனுமதி கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்னர் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான சந்தேக நபருக்கு பிணை வழங்க மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லாத நிலையில் அந்த மனு நிராகரிக்கப்பட்டதுடன் பிணை தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை- ஹிரணை பாலம் இருளில் மூழ்கியுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக மேல் மாகாண சபையின் பிரதித் தலைவர் யசப்பால கோறலகே தலைமையில் தீப்பந்தம் ஏந்திய ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டது.

ஹிரணைப் பாலத்தில் இரவு நேரத்தில் இடம்பெற்ற தீப்பந்தமேற்றிய ஆர்ப்பாட்டத்தில் மாகாணசபை உறுப்பினர்களான லலித் எல்லாவல, சுனேத்ரலால் பெர்னான்டோ உள்ளிட்ட முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேசவாசிகளும் கலந்துகொண்டனர்.

இப்பாலத்தில் மின்சார விளக்குகள் செயலிழந்து காணப்படுவதால் பயணிகள் இரவு காலத்தில் பெரும் கஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம்-எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

# குழந்தைகளிடையே தொழுநோய் பரவும் அபாயம் அதிகரிப்பு

## தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவு

குழந்தைகள் மத்தியில் தொழுநோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவு அறிவித்தது.

கொழும்பு, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் அதிகளவிலான குழந்தைகள் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் சுமார் 140 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரியந்த கருணாரத்ன கூறினார்.


இதனால், சிறுவர்களின் சருமத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

தொழுநோயால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, சிகிச்சைகள் அளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் இலங்கையில் 1853 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இவர்களில் 42 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலும் 15 வீதமானவர்கள் தென் மாகாணத்திலும் அடையாளம் காணப்பட்டதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டது.

# தகவல் அறியும் சட்டம் குறித்து சிறுபான்மைக்கு தெளிவில்லை

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஆதங்கம்



(ஏறாவூர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

நல்லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இது ஜனநாயகத்துக்கு பலம் சேர்க்கும் மாபெரும் வெற்றியாக இருந்தபோதிலும் இச்சட்டம் பற்றி எதுவுமே அறியாதவர்களாகவே முஸ்லிம் சமூகம் இருக்கின்றமை கவலையளிப்பதாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர், நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்துவோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய தான் வழங்கிய வாக்குறுதியை அவர் நிறைவேற்றியுள்ளார். இது நல்லாட்சி அரசின் மாபெரும் சாதனையாகும்.

ஜனநாயகத்துக்கு பலம் சேர்க்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. அது அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டம். ஆனால், துரதிஷ்டவசமாக இது குறித்து முஸ்லிம் சமூகம் விழிப்பாக இல்லை. இச்சட்டத்தின் பயன்பாடுகள் தொடர்பில் சிறுபான்மை சமூகத்துக்கு தெளிவூட்ட வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகளை- உரிமைகளை சரியான முறையில் அனைவரும் பயன்படுத்த வேண்டும். மாறாக, அச்சட்டத்தை தவறான வழியில் பயன்படுத்துவது அதன் செயற்பாடுகளுக்கு பாதிப்பாக அமையும்.

இச்சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பக்கபலமாக இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகியோருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வரட்சி, குளிர் மீண்டும் ஆரம்பம்

நாட்டின் பல பிரதேசங்களில் வரட்சி காலநிலையுடன் காலை மற்றும் இரவு வேளைகளில் அதிக குளிரான கால நிலை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

கிழக்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் பல பிரதேசங்களில் காலை வேளைகளில் குளிர் மற்றும் பனி காலநிலை ஏற்படும் என்றும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும், நுவரெலியா பிரதேசத்தில் உறைப்பனி காலநிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

# பொலிஸ் சீருடையில் மாற்றம்

பொலிஸ் சேவையின் கௌரவத்தை உயர்த்தும் நோக்கில் தற்காலத்திற்கு பொருத்தமான பொலிஸ் சீருடையை மாற்றுவது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களிடம் கருத்துரைகளை பெற்றுகொள்ளும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

15 வினாக்கள் கொண்ட விண்ணப்பங்களை ஆய்வு செய்த பின்னர் நடைமுறைக்கு பொருத்தமான முறையில் பொலிஸ் சீருடை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில், 1866 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட குறித்த பொலிஸ் சீருடை 1925 ஆம் ஆண்டு மற்றும் 1957 ஆம் ஆண்டும், இறுதியாக 1975 ஆம் ஆண்டு மாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு டி.எஸ். பொன்விழாவில் ஜனாதிபதி பிரதம அதிதி

(அஷ்ரப் ஏ சமத்)



கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரியின் பொன்விழா எதிர்வரும் 10 ஆம் திகதி கல்லூரி அதிபர் ஆர்.எம்.என். ரத்நாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ அதிதிகளாக கல்வியமைச்வர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் மாணவர்களது பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பொன்விழா முத்திரை வெளியீடு, புதிய கட்டிடமும் திறந்து வைக்கப்படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் ஆர்.எம். எம். ரத்நாயக்கா தெரிவித்தார்.

அத்துடன் இங்கு கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் டிஜிட்டல் முறையில் அடையாள அட்டை வழங்குதல். அத்துடன் அன்று முதல் மாணவர்களின் வரவுகள் அடையாள அட்டை மூலம் டிஜிட்டல் இயந்திர முறையில் பதியப்படும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி 2 மணிக்கு இஸ்லாமிய நிகழ்வுகள் அலஸ் மண்டபத்தில நடைபெறவுள்ளதோடு, 50 துறவிகளுக்கு அன்னதானம் வழங்குதல் நிகழ்வும், 12 ஆம் திகதி பொரளை அக்குவைனாஸ் கல்லூரியில் கிறிஸ்தவ மத நிகழ்வுகளும், 04.30 மணிக்கு ஸ்ரீ பொன்னம்பாலவானேச்சர கோவிலிலும் வழிபாடு நடைபெறும்.

பொன்விழாவினையொட்டி 15 ,16, 17 ஆம் திகதிகளில் கல்லூரியில் மாபெரும் கண்காட்சிகள் நடைபெறும். மேலும், சபாநாயகார் கருஜய சூரிய, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாஸ ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சிகளை திறந்து வைப்பார்கள்.

# பொலிஸ்மா அதிபர் மக்கள் சந்திப்பு 9 ஆம் திகதி

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறும் பொலிஸ்மா அதிபர் மக்கள் சந்திப்பு இம்முறை வெள்ளிக்கிழமை நடைபெறாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. எதிர்வரும் 10 ஆம் திகதி பௌர்ணமி தினம் என்பதால் அத்தினத்தில் குறித்த மக்கள் சந்திப்பு தினம் நடைபெறாத என்றும், அதற்கு பதிலாக எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை பொலிஸ் மா அதிபர் மக்கள் சந்திப்பு தினம் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

# கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் நடைபெறவுள்ளன.

பஸ்துன்ரட்ட மற்றும் மஹரகம ஆகிய பிரதேசங்களின் கல்லூரிகளை தவிர நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப்பரீட்சை இன்றிலிருந்து நடைபெறவுள்ளது. கல்வியாண்டுக்கு 4 ஆயிரத்து 69 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

# பேருவளை பிரதேசசபை பற்றி மாகாணசபையில் இன்று கேள்வி

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

பேருவளை பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பில் மேல்மாகாண சபையின் களுத்துறை மாவட்ட ஆளும் தரப்பின் மாவட்ட உறுப்பினர் பிரசன்ன சஞ்சீவ மேல்மாகாண உள்ளூராட்சி அமைச்சரிடம் பல்வேறு வினாக்களை முன்வைத்துள்ளார்.

பேருவளை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் குழாம் முறையற்ற ரீதியில் மேலதிக நேர கொடுப்பனவு பெறல், சபையின் மக்கள் நலன்புரிச் சேவைகள் முறையாக இடம்பெறாமை மற்றும் அளுத்கமையில் அமைந்துள்ள நெனசல நிலையம் தொடர்பிலான மூன்று பிரதான வினாக்களுடன் சம்பந்தமான 33 உப வினாக்கள் தொடர்பில் விளக்கம் பெறுவதற்காக எழுத்து மூல வினாக்கள் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் மாகாணசபை உறுப்பினரினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணசபையி பெப்ரவரி மாத முதலமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் மேற்படி வினாக்களும் இடம்பெற்றுள்ளன.

குறித்த கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு பத்தரமுல்லவில் மேல் மாகாண சபையின் கட்டடத் தொகுதியில் தலைவர் சுனில் விஜேரத்ன தலைமையில் இடம்பெறவுள்ளது.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
07TH FEBRUARY 2017 - TUESDAY

# தகவலறியும் சட்டத்தைச் சரியாக பயன்படுத்துவோம்

இம்மாதம் 03 ஆம் திகதி முதல் தகவலறியும் சட்டம் இலங்கையில் அமுலுக்கு வருகின்றது. இந்த சட்டத்தின்படி, அரச நிறுவனங்களின் தகவல்கள், அந்நிறுவனங்கள் மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் பற்றிய தகவல்கள் போன்றவற்றை, இலங்கைப் பிரஜைகள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது.

ஓர் அரச நிறுவனம் மேற்கொள்ளும் செயற்றிட்டமொன்றில் எவ்வளவு பணம் செலவிடப்படுகின்றது, செயற்றிட்டம் எந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு பொருளுக்கும் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது என்ற அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்த தகவல்களை வழங்குவதற்காக, ஒவ்வொரு அரச நிறுவனங்களிலும் தகவலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், இந்த அதிகாரியை அணுகி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். குறித்த ஒரு நிறுவனத்தில் தகவலதிகாரி இல்லாதபோது, அந்நிறுவனத்தின் தலைவர்தான், அப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

ஒருவர் தகவல் அறியும் சட்டத்தின்படி, ஒரு நிறுவனத்தில் தகவல்களைக் கேட்கும்போது, அங்கு தகவல் வழங்க மறுக்கப்பட்டால், வழக்குப் பதிவு செய்யும் வாய்ப்பும் உள்ளது. எனவே, இந்த சட்டத்தின் மூலம் அரச நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் தகவலறியும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சி பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டது. முன்னாள் ஊடக அமைச்சரான தர்மசிறி சேனாநாயக்க இவ்வாறான ஒரு சட்டத்தின் தேவையை மிகவும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த தகவலறியும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் உடன்பட்டிருந்தார்.

2001 இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டது. பின்னர், அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தனி எம்.பி. முன்மொழிவாக முன்வைக்கப்பட்டது.

இப்போதைய அரசும், ஆட்சிக்கு வந்தால் தகவலறியும் சட்டத்தைக் கொண்டுவருவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கியே தேர்தலில் போட்டியிட்டது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இப்போது இந்த சட்டம் அமுலுக்கு வந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்த தகவலறியும் சட்டத்தை இலங்கை மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்வது, இந்த நாட்டில் ஊழலைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க வழிசமைக்கும்.

முன்னாள் ஆட்சியாளர்கள் மீது முன்வைக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் போன்று, இனிமேலும், ஊழல் குற்றச்சாட்டுக்களை எவர் மீதும் முன்வைக்க வேண்டி ஏற்படாதளவுக்கு, இந்த சட்டத்தை உச்ச அளவு பயன்படுத்த மக்கள் முன்வர வேண்டும்.

பொதுமக்கள் வரியாக செலுத்தும் பணமும், பொதுமக்களை அடகு வைத்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெறும் பணமும் எவ்வாறு செலவழிக்கப்படுகின்றன என்பது குறித்து பொதுமக்கள் கேள்வி கேட்கும் உரிமையை இந்த சட்டம் ஏற்படுத்தித் தந்துள்ளது.

எவ்வாறாயினும், தகவலறியும் சட்ட உரிமையைப் பயன்படுத்தி, பொதுமக்கள் தகவல் கேட்க முடியாத சில விவகாரங்களும் இச்சட்டத்தின் மூலம் வரையறை செய்யப்பட்டுள்ளன. மருத்துவ அறிக்கை, தேர்தல் பெறுபேறு, அரச பாதுகாப்பு உள்ளிட்ட 21 விடயங்கள் இவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளன.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. அதாவது, தகவலறியும் சட்டத்தை பொதுமக்கள் ஏன் பயன்படுத்த வேண்டும், எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அரச தகவல் திணைக்களமும், ஊடக அமைப்புக்களும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இந்த விடயம் பெருமளவு கொண்டுசெல்லப்படாததனால், இது குறித்து ஆவன செய்ய வேண்டும். தமிழ் ஊடக அமைப்புக்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமும்கூட இதில் கவனம் எடுக்க வேண்டும். அப்போதுதான், இந்த மகத்தான சட்டத்தை சரியாகப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

---

# சுதந்திரம் என்றால் என்ன?

## ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்

கலாநிதி எம்.எம்.நயீம்
UNIVERSITY TEKNOLOGI PETRONAS
MALAYSIA

இலங்கையின் 69 வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நாடு முழுவதிலும் மட்டுமன்றி கடல் கடந்த தேசங்களிலும் வெகு விமர்சையாக நடந்து முடிந்தது. சுதந்திரம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் குறித்த சில கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு இச்சந்தர்ப்பம் மிகவும் பொருத்தமானதாகும்.

சுதந்திர தினம் வருகின்ற போது ஒவ்வொரு நாடும் அதனைக் கொண்டாடுகின்ற விதமும் அதற்குக் கொடுக்கின்ற முக்கியத்துவமும் சுதந்திரம் மனித இயல்பின் ஆணித்தரமான உணர்வும் தேட்டமும் என்பது புலனாகின்றது. இவ்வியல்புடன் இயைந்தாற்போல இஸ்லாமிய வழிகாட்டல் அமைந்திருப்பது இஸ்லாம் மனித இயல்பின் மார்க்கம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

சுதந்திரம் வெறும் உரிமை என்பதற்கப்பால் மனிதன் உயிர்வாழ்வதற்கு அத்தியவசியமானதொரு காரணி என இஸ்லாம் கருதுகின்றது. அதனால்தான் அடிமைத்துவத்தை மரணத்துக்கு நிகராக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.



யார் ஒரு முஃமினை தவறுதலாக கொலை செய்து விடுகின்றாரோ அவர் ஒரு முஃமினான அடிமையை விடுதலை செய்யட்டும் (சூரா அல்-நிஸா 92).

இமாம் நஸயி (ரஹ்), இந்த வசனத்துக்கு விளக்கமளிக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார். முஃமினான ஓர் உயிர் பறிக்கப்பட்டு, அதற்குப் பகரமாக அடிமைத்துவத்திலிருந்து ஓர் உயிர் சுதந்திரமாக விடப்படுகின்ற போது, மரணித்த நிலையில் இருந்து சுதந்திரம் உயிர் கொடுத்தது போன்று கருதப்படுகின்றது. அடிமைத்துவம் இங்கு மரணத்துடன் இணைக்கப்பட்டிருப்பது அவதானத்துக்குரியதாகும்.

'இஸ்லாம் மனிதனது சுதந்திர நாட்டத்தை கவனத்திற் கொண்டு, இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதிலும் பூரண சுதந்திரம் வழங்கியுள்ளது. மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமும் கிடையாது.' (அல் பகரா 256). இஸ்லாமிய கொள்கைகள் சத்தியமானது எனக் கருதிய போதிலும் மனித சுதந்திரத்துக்கு முன்னால், அவை சரணடைந்து மனித சுதந்திரத்துக்கு வெற்றியை ஈட்டிக் கொடுக்கின்றது.

இஸ்லாத்தின் அடிநாதமான ஓரிறைக் கொள்கை (தவ்ஹீத்) என்பது அனைத்து வகையான உலகியல் அடிமைத்துவங்களிலிருந்தும் சுதந்திரம் பெற்று முழு உலகையும் படைத்த உண்மையான எஜமானுக்கு மாத்திரம் அடிமைத்துவத்தை ஒப்புவிப்பதாகும்.

ஒரு மனிதன் தன்னைப் போன்ற ஏனைய மனிதர்களுக்கோ அல்லது ஏனைய எந்தப் படைப்புகளுக்கோ அடிமைப்படுவதுவே உண்மையான அடிமைத்துவமாகும். இக்கருத்து இஸ்லாத்தின் மூல வாக்கான கலிமா (லா இலாஹ இல்லல்லாஹ்) வில் துல்லியமாக தொனித்து நிற்கின்றது.

அந்த வகையில் அல்லாஹ் மனிதனை இந்தப்பூமியில் அவனது பிரதிநிதியாக (கலீபா) ஆக்கியிருக்கின்றான். அதனால் அவன் பூமியின் படைப்புகளின் பிரதிநிதியல்ல. அவன் அவற்றுக்கு எஜமானாகவும் அவற்றுக்குப் பொறுப்பானவனாகவும் கருதப்படுகின்றான். இதனால்தான் இமாம் ஹஸனுல் பன்னா சுதந்திரம் இஸ்லாமிய மார்க்கக் கடமைகளில் ஒன்றாகும்' எனக் குறிப்பிடுகின்றார்கள்.

அல்குர்ஆன் மிக அதிகமாக குறிப்பிட்ட வரலாறு மூஸா (அலை) அவர்களது வரலாறாகும். சுமார் 50 ஸூராக்களில் இந்த வரலாறு குறிப்பிடப்பட்டிருப்பது அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

அது பிர்அவ்ன் எனும் கொடுங்கோல்; ஆக்கிரமிப்பாளனின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டிருந்த பனூ இஸ்ராயீல் எனும் சமூகத்தை விடுதலை பெறச் செய்து சுதந்திரமாக வாழவைத்த வரலாறாகும். மூஸா (அலை) பிர்அவ்னிடம் சென்று நெஞ்சுரத்துடன் மக்களுக்கு சுதந்திரத்தை கேட்டார்.

எம்முடன் பனூ இஸ்ரவேலர்களை அனுப்பிவிடு' (அஷ்ஷுஅரா 17) என்று கேட்டார்கள். ஒரு சமூகத்தின் சுதந்திரப் போராட்டத்துக்கான நடைமுறை உதாரணமாக அல்குர்ஆனில் வரும் இச்சம்பவம் விளங்குகின்றது.

எல்லா நபிமார்களும் தமது தூதான, அல்லாஹ்வைத்தவிர வேறு எந்தக்கடவுளும் இல்லை என்ற தூதை முன்வைத்த போது அதனை முன்னின்று எதிர்த்தவர்கள் அவர்களது சமூகங்களில் மக்களை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த தலைவர்களாகும். இவர்களை அல்குர்ஆன் அல்மலஃ, 'தாகூத்' என்ற பதங்களைக் கொண்டு அழைக்கின்றது.

உமர் (றழி), அடிமைத்துவத்தை ஒழிக்கும் வகையில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு கருத்தைக் கூறியுள்ளார். ஒவ்வொரு தாய்மாரும் தம் பிள்ளைகளை சுதந்திரவான்களாகப் பெற்றிருக்கின்ற நிலையில், நீங்கள் எப்போது அவர்களை அடிமைப்படுத்தினீர்கள்? இந்தக் கருத்தின் மூலம் அனைத்து மனிதர்களுக்குமான சுதந்திரப்பிரகடனத்தை உலகத்துக்கு முன்வைத்தார்கள்.

இதுதான் முஹம்மதியப் பாடசாலையில் அதன் மாணவனான உன்னத ஸஹாபி அம்ரு இப்னு ஆமிர் கற்றுக் கொண்ட பாடமாகும். பாரசீக மன்னன் முன்னிலையில் அவர்கள் தனது தூதை இப்படி விளக்கிச் சொன்னார்கள்: அடியானுக்கு அடியான் அடிமைப்படுவதிலிருந்து அடியார்களின் எஜமானுக்கு அடிமைப்படுத்துவதற்கு அல்லாஹ் எம்மை அனுப்பி வைத்தான்.

இஸ்லாத்தில் சுதந்திரம் என்பது தாய்நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறச்செய்தல் மட்டுமன்றி அது ஒரு முழுமைத்தன்மை வாய்ந்த சுதந்திரமாகும். அந்த வகையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பின்வருமாறு நவின்றார்கள்: தீனாருக்கு அடிமைப்பட்டவன் நாசமாகட்டும், திர்ஹத்துக்கு அடிமைப்பட்டவன் நாசமாகட்டும், பட்டாடைக்கு அடிமைப்பட்டவன் நாசமாகட்டும்'

மனிதன் எந்த வஸ்துவுக்கும் அடிமைப்படாது பூரணமான சுதந்திரத்துடன் இவ்வுலகில் வாழவேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது.

ஒரு மனிதன் தனது மனோ இச்சைகளுக்கும், உடல் இச்சைகளுக்கும் கூட கண்மூடித்தனமாக அடிமைப்படக்கூடாது என இஸ்லாம் வழிகாட்டுகின்றது. இவற்றுக்கான சட்ட மற்றும் ஒழுக்க விழுமியங்கள் என்ற வரையறைகளுக்குட்பட்டு அவற்றைக் கையாள வேண்டும். அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: (நபியே!) எவன் தன்னுடைய (உடல், மனோ) இச்சையைத் தன்னுடைய கடவுளாக ஆக்கிக் கொண்டானோ, அவனை நீர் பார்த்தீரா?' (அல்ஜாஸியா:23)

இஸ்லாத்தில் சுதந்திரம் என்பது அந்நிய ஆதிக்கத்திலிருந்து நிலத்தையும் அதிகாரத்தையும் விடுவிப்பது மாத்திரமன்றி கொள்கைச் சுதந்திரம், அரசியல் பொருளாதார, கலாசார, விழுமியங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான அடிமைப்படுத்தும் காரணிகளில் இருந்தும் விடுதலை பெறுவதாகும். இவ்வாறுதான் இஸ்லாம் மனிதனை கண்ணியப்படுத்தியிருக்கின்றது.

அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம். இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு (ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்.' (சூரா அல் இஸ்ரா 70).

---

# வலம்புரியை வைத்திருப்பது சட்டத்தினால் தடை செய்யப்பட்டதா?

பொலிஸ் அதிரடிப்பிரிவின் பொத்துவில் சாஸ்திரவெளி முகாமின் கட்டளையிடும் அதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ.எம்.இப்ராஹிமுக்கு சில தினங்களுக்கு முன் தகவலொன்று கிடைத்தது. 10 கோடி ரூபா பெறுமதிக்கு வலம்புரி ஒன்றை விற்பனை செய்ய தயாராகும் ஒரு குழுவினர் பற்றியதே இத்தகவலாகும்.

இந்த வலம்புரியை விற்பதற்காக ஒரு கொள்வனவாளரை தேடி மட்டக்களப்பு கல்குடா பிரதேசத்தில் இக்குழுவினர் அலைந்து திரிந்ததாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் பரிசோதகர் இப்ராஹிம் இந்த கொடுக்கல்வாங்கல் நடைபெறும் போதே அவர்களை கைது செய்வதற்கு திட்டமிட்டார். தனது சகபாடி ஒருவரை வியாபாரியாக தயார்படுத்தினார். தயார்படுத்திய வியாபாரியே புரோக்கர் ஒருவரை சந்திக்க ஏற்பாடு செய்தார். அவர் இந்த வலம்புரியை விற்பதற்கான இடைத்தரகராவார். ஒரு சங்கிலியைப் போன்று ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்ட பல இடைத்தரகர்கள் இதில் இருந்தார்கள். சகல இடைத்தரகர்களுக்கும் கொமிஷன் கிடைப்பதனை இப்ராஹிம் அவதானித்தார். வலம்புரி 10 கோடி ரூபா விலை நிர்ணயிக்கப்படுவது இடைத்தரகர்கள் விலையிட்ட எல்லையற்ற பெறுமானமாகும்.

வலம்புரிக்கு இவ்வளவு பெறுமானம் கிடைப்பது அதன் மூலம் சுபீட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலாகும். வியாபாரியைப் போன்று போலியாக நடித்த இப்ராஹிமின் சகபாடி வலம்புரிக்கு 10 கோடி அல்ல 20 கோடி தர தயார் என இச்சந்தர்ப்பத்திலே காட்டுகிறார். தரகரோடு இடம்பெற்ற இக்கலந்துரையாடல்களின் பின் கடந்த 23ஆம் திகதி இப்ராஹிமின் சகபாடி இந்த வலம்புரியை விலை கொடுத்து வாங்குவதாக தெரிவித்து விலை நிர்ணயித்தார். அத்தினம் மாலை கல்குடா விஷ்ணு கோவில் வீதியில் இதற்காக ஓர் இடத்தை தீர்மானித்துக்கொண்டார்கள்.

குறிப்பிட்ட திகதியன்று இப்ராஹிமின் சகபாடியும், வலம்புரி உரிமையாளரும் மற்றும் சிலரும் அங்கே வந்து அவசர அவசரமாக வலம்புரியை விற்றுச் செல்வதற்கு இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு பொலிஸ் கூட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை அங்குதான் உருவானது. வலம்புரியை வைத்திருந்தார் என்ற குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார். விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கும் தகவலின்படி 14 அங்குல நீளமான இந்த வலம்புரி 704 கிராம் பாரத்தை கொண்டது. அதற்கு உயிர் இல்லை. அதன் மூடி மட்டுமே இருந்தது.



கடலுக்குச் சென்ற மீனவர் சிலருக்கு இந்த வலம்புரி 5 மாதங்களுக்கு முன்பு கிடைத்திருக்கின்றது. இதனை விற்க முற்படுவது சுபீட்சம் கிடைக்கும் என்று அறிந்ததன் காரணமாகவே. வலம்புரி பற்றிய சட்டம் சரியாக தெரியாததன் காரணமாகவே இவர்கள் இதனை விற்க முற்பட்டு இவர்களுக்கு கூட்டுக்குள் செல்ல வேண்டி ஏற்பட்டது. வலம்புரி சுபீட்சமானது என்ற நம்பிக்கை இந்துக்களுக்கே கூடுதலாக இருக்கின்றது. வலம்புரியை வைத்திருப்பது பற்றி இந்நாட்டு மக்கள் அறிவூட்டப்படுவது முக்கியமாகும். இது குறித்து பொலிஸார் மக்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

# வாக்களிக்கப்பட்ட உத்தரவாதங்களை அரசாங்கம் மறந்து செயற்படுகிறதா?

## அமைச்சர் ஹக்கீம் கேள்வி




(நாச்சியாதீவு பர்வீன்)

ஆட்சி மாற்றத்தின் போது வழங்கப்பட்ட உத்தரவாதங்களை இந்த அரசு மறந்து செயற்படுகின்றதா? எனும் சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. இந்த நல்லாட்சியின் மிக முக்கிய பங்காளிகளாக சிறுபான்மையின மக்கள் இருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் மூலமே இந்த நல்லாட்சியை இந்த நாடு அனுபவிக்கிறது, எதிர்காலத்திலும் இதே தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையும், புரிந்துணர்வுமே எதிர்காலத்தில் இந்த இரு சமூகங்களினதும் உரிமைகளை வென்றெடுக்க ஏதுவாக அமையும் என நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் துறை அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்தில் 3.5 மில்லியன் ரூபா செலவில் அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரித்து வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து அங்கு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் வன்னி மாவட்டத்தின் ஒரு நிருவாக மாவட்டமான வவுனியா மாவட்டத்தில் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களோடு இந்த வருட நிதியொதுக்கீட்டில் பல புதிய வேலைத்திட்டங்களை நாங்கள் அடையாளப்படுத்தியுள்ளோம்.எமது அமைச்சினூடாக மேலதிகமாக 130 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நீர் வழங்கல் திட்டத்தை வழங்குவதற்காக கருத்திட்டங்களை எமது அமைச்சு உத்தேசித்துள்ளது.வவுனியா மாவட்டத்திற்கான குடிநீர் பாவனையாளர்களின் நன்மைகருதி இரண்டு குடிநீர் திட்டங்களை எமது அமைச்சு செயற்படுத்துவதற்கான திட்டவரைபுகளை உருவாக்கியுள்ளோம் பாவற்குளத்திலிருந்து ஒரு குடிநீர்த்திட்டத்தையும் மல்வத்து ஓயாவை இடைமறித்து நீர் நிலையை உருவாக்கி அதன் மூலம் இன்னொரு திட்டத்தையும் உருவாக்குவதே எமது நோக்கம். அதேபோல ஐக்கிய நாடுகள் சபையின் பசுமையான சூழலை உருவாக்குவதற்கான நிதி வழங்கல் திட்டத்தின் கீழ் இந்த மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் நீர்வழங்கல் திட்டங்களை இலகுபடுத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறோம். ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டினால் பல கிராமங்களை அபிவிருத்தி செய்யமுடியும்.

இதற்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் இரு நீர் வழங்கல் திட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்துவதற்கான இரண்டு நீர் மூலங்களை அடையாளம் கண்டு ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான செயற்திட்ட அறிக்கைகளையும் தயார் செய்து திட்ட வரைபுகளை உருவாக்கி இதற்கான அனுமதியை தேசிய திட்டமிடல் நிறுவனத்திடம் பெறுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம். இந்த திட்டமானது மன்னார் மாவட்ட கிராமிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். முசலி பிரதேச செயலகப்பிரிவிலே இருக்கின்ற வியாடிக் குளத்தில் இருந்தும் அவ்வாறே கல்லாறு ஆற்றினை குறுக்காக மறித்து அதன் மூலமும் ஒரு குடிநீர் திட்டத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளோம். என்னுடைய இந்த பதவி காலத்திற்குள் இவற்றையெல்லாம் சாதித்து விட வேண்டும் என செயலாற்றுவதோடு எனது அமைச்சின் அதிகாரிகளையும் இந்த விடயத்தில் தீவிரமாக இயங்குமாறும் பணித்துள்ளேன். இதுதொடர்பில் அமைச்சின் உயர் அதிகாரிகளையும் நான் அடிக்கடி சந்தித்து இந்த திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்துகின்ற ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். வெறுமனே நீர் வழங்கல் திட்டங்களோடு மட்டுமே எமது பணிகளை மட்டுப்படுத்தாமல் இந்த வன்னி பிரதேசத்தின் மீள்குடியேற்ற விடயங்களிலும் அந்த மீள் குடியேற்ற பிரதேசங்களில் சுத்தமான குடிநீர் திட்டங்களை வழங்க வேண்டிய கடப்பாடு இருக்கிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மாத்தளை மாவட்டத்தில் சுதந்திர தின நிகழ்வுகள்

(மாத்தளை நிருபர் எம்.எஸ்.எம். மஸாஹிம்)

இலங்கையின் 69ஆவது தேசிய சுதந்திர தின விழாவிற்கு சமமாக மாத்தளை மாவட்ட சுதந்திரதின விழா கடந்த 4ஆந் திகதி காலை 8.30 மணிக்கு மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

மாத்தளை மாவட்ட செயலகம், மற்றும் மாத்தளை மாவட்டத்தில் இருக்கும் சகல அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹார தலைமையில் மாத்தளை இந்துக் கல்லூரி மைதானத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்களிப்புடன் சுதந்திர தின விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது.

# மட்டு.வில் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(ஏறாவூர் ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

போதையற்ற சகவாழ்வுடன் கூடிய நாடு என்ற ஜனாதிபதியின் போதையொழிப்புத் திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பிலுள்ள எட்டு நகரப் பாடசாலைகளில் மாணவர்களின் காலை ஒன்று கூடலின்போது சுமார் 30 நிமிடங்கள் போதைப் பொருளால் ஏற்படும் விபரீதங்கள் பற்றி விழிப்புணர்வுப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக மட்டக்களப்பு விமோச்சனா மதுப் பாவனையாளர் புனர்வாழ்வு இல்ல நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்விகா சகாதேவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஏற்கனவே போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியிருப்போரை மீட்டெடுப்பதும், புதிதாக போதைப் பொருளுக்கு அடிமையாகாமல் தடுக்கும் நோக்கிலும் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக மட்டக்களப்பு நகரப் புறத்திலுள்ள இந்துக்கல்லூரி, புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம், ஆனைப்பந்தி மகாவித்தியாலயம், புனித திரேசா பாடசாலை, சிசிலியா பெண்கள் பாடசாலை, இக்னேசியஸ் வித்தியாலயம், திராய்மடு தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் போதைப் பொருள் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை இக்ராவில் இரத்ததான முகாம்

(பேருவளை நிருபர்)

பேருவளை அம்பேப்பிட்டிய முஸ்லிம் இளைஞர் சங்கமும் வலதர மெத்தாராம இளைஞர் சங்கமும் இணைந்து 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள இரத்ததான நிகழ்வு இன்று 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 8.30 மணிக்கு இக்ரா தொழில்நுட்ப கல்லூரி வீதியில் உள்ள சமயப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இனங்களுக்கிடையே நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வில் சிங்கள, முஸ்லிம் மக்கள் இரத்ததானம் வழங்குவர். சமய தலைவர்கள், பிரமுகர்கள் பலரும் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவர்.



69ஆவது சுதந்திர தினத்தையொட்டி மதுரங்குளி, விருதோடை பிரதேசத்தில் கிராம அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்போடு பிரதேச இளைஞர்களின் பங்களிப்போடு டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான சிரமதானப் பணிகள் சுதந்திர தினத்தன்று முன்னெடுக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# பதுளை வை.எம்.எம்.ஏயின் சுதந்திர தின நிகழ்வு

(வாஹிட் குத்துஸ்)

69 ஆவது சுதந்திர தினம் பதுளை வை.எம்.எம்.ஏ. கிளை வளாகத்தில் பதுளைக் கிளை வை.எம்.எம்.ஏ. தலைவரின் தலைமையிலும், வரவேற்புரையோடும் நடைபெற்றது. இந்நிகழ்வினை இன, மத நல்லிணக்க, சகவாழ்வுக்கான நோக்கில் பதுளை வை.எம்.எம்.ஏ யினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விசேட நிகழ்வில் பதுளை முத்தியங்கன ஸ்ரீரஜமஹா விகாரை கும்பல்கமுவே சரணபால தேரர், பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய எம். சுப்ரமணியம் குருக்கள், பதுளை செண்ட் மேரீஸ் ஜோர்ஜ் டி சில்வா பிதா, பதுளைக் கிளை உலமாசபைத் தலைவர் ஹாபிஸ் யூசுப் ஸஹல் மௌலவி ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்புரைகளையும், துஆப் பிரார்த்தனையையும் நிகழ்த்தினர். நிகழ்வில் செயலாளர் ஆஸாத் மௌலவி, பொருளாளர் நாசிம் ஆசிரியர், சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் செயலாளர் ஓய்வாளர் லெப்பை ஆசிரியர், இக்பால், அஸார், சுஹைர் ஒக்ஸ்போர்ட் முகாமைத்துவப் பணிப்பாளர் ரிசான் செய்ன் ( நஸீமி) உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# பாரிய சவால்களை எதிர்கொள்வதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தயாராக வேண்டும்

## மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க



(வத்துகாமம் நிருபர்)

மக்களுக்கு சேவைகளை வழங்கும் போது எதிர்காலத்தில் ஏற்படும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தயாராக வேண்டும், 2020 முதல் 2025 காலப்பகுதியில் நகர மயமாதலினால் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடாத்திய திறன் விருத்தி போட்டியில் மத்திய மாகாணத்தில் முதலாம் இடத்தை பெற்ற பூஜாபிட்டிய பிரதேச சபையின் ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய முதலமைச்சர், தெரிவித்ததாவது,

மத்திய மாகாணத்தில் 43 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதில் நான்கு மாநகர சபைகளும், ஆறு நகர சபைகளும், 33 பிரதேச சபைகளும் இருக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களுக்கு திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெறுவது இலகுவான விடயம் அல்ல. அதேபோல் பெற்ற வெற்றியை பாதுகாப்பதும் இலகுவானதல்ல.

தற்போது மக்கள் நகரங்களை நோக்கி அதிகம் இடம் பெயர்கின்றனர். அதனையே விரும்புகின்றனர். 2020 அல்லது 2025 ஆகும் போதும் சனத் தொகையில் 50 சத வீதமானோர் நகரங்களிலே குடியேறி விடுவர். இவர்கள் அனைவருக்கும் தேவையான அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதில் பாரிய சவால்களை உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொள்ள வேண்டி வரும். அச் சவால்களை எதிர்நோக்க அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தயாராக இருக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் மட்டுப் படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது மிகவும் விரிவு படுத்தப்பட்டதாகும். ஆகவே மக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களது சேவை மிக அத்தியாவசியமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார். மத்திய மாகாண வீதி அபிவிருத்தி போக்குவரத்து மின் சக்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் எதிரிவீர வீரவர்தன, மத்திய மாகாண சபை உறுப்பினர் குனதிலக்க ராஜபக்ஷ பூஜாபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் சாமிந்தி அமதோரு உட்பட இன்னும் பலர் இங்கு உரையாற்றினர்.

# கிழக்கில் அரசியலில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு

## ஸ்மாட் ஒப் ஸ்ரீலங்கா இளைஞர் மாநாட்டில் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி



கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம், நல்லிணக்கம் கொண்டு வாழ்ந்து வந்ததினை எவரும் மறுக்கமுடியாது. அரசியல் துறையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் பலர் இணைந்து பாராளுமன்றம் சென்ற வரலாறுகள் உண்டு. இதேபோல் கல்வித்துறையிலும் மிக நெருக்கமான இடைத்தொடர்புகள் இருந்து வந்துள்ளன என அண்மையில் சாய்ந்தமருது லீமெரிடியன் மண்டபத்தில் நடைபெற்ற 'தேசிய சகவாழ்வும் இளைஞர் தலைமைத்துவமும்' என்ற தொனிப்பொருளிலான இளைஞர் மாநாட்டில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கைத்தொழில் வர்த்தக அமைச்சின் பாராளுமன்ற விவகார செயலாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனைத் தொகுதியின் அமைப்பாளருமான ஏ.ஆர்.எம். ஜிப்ரி குறிப்பிட்டார்.

ஸ்மாட் ஒப் ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் றிஷ்கான் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

சுவாமி விபுலானந்த அடிகளார் கல்லடியில் சிவானந்தா வித்தியாலத்தை நிர்வகித்த காலத்தில், மட்டக்களப்பில் நிர்வாகப் பொறுப்பினை வகித்திருந்த சிவில் அதிகாரியான அறிஞர் ஏ.எம். ஏ. அஸீஸ் விபுலானந்தவுடன் மிக நெருக்கமான நட்பினைக் கொண்டிருந்தார். அடிக்கடி கல்வி தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி சிவானந்தாக் கல்லூரியின் பௌதீக அபிவிருத்திக்கு அஸீஸ் பேருதவி புரிந்துள்ளார். இதன் காரணமாக இப்பாடசாலையின் விடுதியில் முஸ்லிம் மாணவர்களும் தங்கிப் படிக்கும் புரிந்துணர்வு ஏற்பட்டது. விபுலானந்தர் கல்விகற்ற மெடிஸ்த பாடசாலையாகிய கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில்தான் கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர், எம்.எம். முஸ்தபா, எம். ஏ. மஜீட், எம். சீ. அஹமது, ஏ.ஆர். மன்சூர், எம்.எச்.எம். அஷ்ரப் முதலிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா போன்றோர்கள் கல்வி கற்றுள்ளனர்.

இவ்வாறு அன்றைய காலகட்டத்தில் எதுவித பேதங்களுமின்றி தமிழ், முஸ்லிம் உறவு பாடசாலை மட்டத்திலிருந்தே வலுப்பெற்றிருந்தது. இதேபோல் இனநல்லுறவு, தேசிய நல்லிணக்கம் என்பதை பாடசாலைகளிலும் மாணவர்கள் - இளைஞர்கள் மத்தியிலும் இறுக்கமடையும் வண்ணம் இவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சகவாழ்வு, இன நல்லிணக்கம், அரச கரும மொழிகள் அமைச்சில் அமைச்சர் மனோகணேசன் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றார். தனது அமைச்சின் மூலமாக தேசிய சகவாழ்வுக்கும், இளைஞர் தலைமைத்துவ ஆளுமை விருத்திக்கும் அமைச்சர் ஆற்றிவருகின்ற பணிகளைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் மனோ கணேஷன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இம்மாநாட்டில், தென்கிழக்கு பலகலைக்கழக உபவேந்தர். கலாநிதி எம்.எம்.எம். நாஜிம், சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி ரமீஸ் அபூபக்கர், கலாநிதி எம்.ஐ.எம். ஜெஸீல், அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவர் கலாநிதி ஏ.எம். ஜமீல் ஆகியோரும் உரையாற்றினர்.



நீர்கொழும்பு அஷ்ஷபாப் ஜெம்மியதுல் உலமா நீர்கொழும்பு கிளையுடன் இணைந்து நடாத்திய சுதந்திரதின விழாவில் நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிரதம பேஷ் இமாம் மௌலவி ஐ.எஸ் ஹனீபா தேசிய கொடியை ஏற்றுவதையும் மேல்மாகாண சபை உறுப்பினர் சாபி றஷீம் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எம்.ஏ. இஸட் பரீஸ் பெரிய பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் எம்.எஸ்.எம். அன்வர் அல்ஹிலால் மத்திய கல்லூரி அதிபர் எப்.எம். இர்ஷாத் ஆகியோர் நிற்பதையும் கலந்துகொண்ட கழகங்கள் மத்ரஸா மாணவர்களையும் படங்களில் காணலாம்.
(நீர்கொழும்பு நிருபர்)





சுதந்திர தினத்தை முன்னிட்டு பாலமுனை அல் ஈமானிய்யா அரபுக்கல்லூரி மற்றும் ஒலுவில் ஹிறா பாலர் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகளை காணலாம். (ஐ.ஏ.ஸிறாஜ் பாலமுனை)

சுதந்திர தின நிகழ்வின் கிழக்கு மாகாண நிகழ்வு, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தலைமையில், திருகோணமலை ஏகாம்பரம் மைதானத்தில், இடம்பெற்றது. முப்படைகளின் அணிவகுப்புடன் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில், மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலபதி, மாகாண சபை உறுப்பினர்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் மாவட்ட. அரசாங்க. அதிபர் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (முள்ளிப் பொத்தானை நிருபர்)



சுதந்திரதினத்தை முன்னிட்டு மாத்தளை இந்து தேசியக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மாத்தளை உறுப்பினர் ரன்ஜித் அலுவிஹார, திருமதி ரன்ஜித் அலுவிஹார ஆகியோரை மாத்தளை மாவட்ட அரச யு.டி.டி குசும்சிறி வரவேற்றார். அரச அதிபர் மற்றும் பிரதம அதிதிகள் உரையாற்றுவதையும் இலங்கை பொலிஸ், இராணுவம்,விமான, கடற்படை மற்றும் சிவில் அமைப்புக்களின் அணிவகுப்புகளும் இடம்பெற்றன.80 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இலங்கையின் விசாலமான தேசியக்கொடியையும் இந்துக்கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பமான அணிவகுப்பு படையினர் ஏ9 வீதி திருகோணமலை வீதி மற்றும் ரோஸா வீதி வழியாக சான்த தோமஸ் கல்லூரி நோக்கி செல்வதையும் படங்களில் காணலாம். (மாத்தளை எம்.எஸ்.எம். மஸாஹிம்)















இலங்கயின் 69 வது தேசிய சுதந்திரதின நிகழ்வினை முன்னிட்டு அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட நிகழ்வு அநுராதபுரம் கச்சேரி வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமத்திய மாகாண ஆளுனர் பீ.பி.திசானாயக்க தேசிய கொடியை ஏற்றி வைப்பதையும் படையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படம்: அநுராதபுரம் விசேட நிருபர்)



சுதந்திர தினத்தையொட்டி வெலிகம பிரதான பஸ் நிலையத்துக்கருகாமையில் இடம்பெற்ற நிகழ்வில், தென் மாகாண சபை உறுப்பினர் சதுர கலப்பத்தி, வெலிகம பிரதேச செயலாளர் சுமித் சாந்த மற்றும் வெலிகம பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி மிலான் லசந்த புத்திக ஆகியோர் முறையே தேசிய கொடி, மாகாண, மற்றும் மாவட்ட கொடிகளை ஏற்றி வைத்து சுதந்திரதினத்தை கொண்டாடினர்.
(வெலிகம நிருபர்)



தேசிய ஒற்றுமை எனும் தொனிப்பொருளில் இம்முறை நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்வுகள் அக்கரைப்பற்றிலும் கொண்டாடப்பட்டன. அக்கரைப்பற்று அந்நூர் சமூக கலாசார அபிவிருத்தி சபை அக்கரைப்பற்று கடற்கரைக்கு அருகாமையில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசல் சதுக்கத்தில் அமைப்பின் தலைவர் டாக்டர் எம்.ஏ.எம். அனஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அஷ்ஷெய்க் எஸ். அப்துல் ஹாதி ஜம்மியதுல் உலமா சபை செயலாளர் அஷ்ஷெய்க் கே.எல் நைஸர் உட்பட அந்நூர் அமைப்பின் பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (பகுர்)







முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறுக் தனது ஆதரவாளர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையும் நிகழ்வும் வன்னிக்கு ஒளி வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்டத்தில் முசலி, சிலாவத்துறையில் நடைபெற்றது. இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசீம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், முன்னாள் பிரதியமைச்சர் கே.ஏ. பாயிஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான முத்தலிப்பாவா பாறுக், உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (பிறவ்ஸ் முஹம்மட்)

## போரதொட்ட அல்பலாஹில் இன்று விளையாட்டு போட்டி

(நீர்கொழும்பு இஸ்மதுல் றஹுமான்)

நீர்கொழும்பு போரதொட்ட அல்பலாஹ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.ஏ.எம். ஹுஸ்னி சர்ப் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாக மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய கலந்துசிறப்பிப்பதுடன் கௌரவ அதிதிகளாக மேல்மாகாண அமைச்சர் லலித் வினிகரத்ன நீர்கொழும்பு வலய கல்விப்பணிப்பாளர் என்டனி பெர்ணான்டோ , மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சகாவுல்லா முன்னாள் மாநாகர சபை உறுப்பினர் எம்.ரி.எம். நஸ்மிஹார் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மினா, அரபா, கமா, ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெறும் இப்போட்டி நிகழ்ச்சிகள் இன்று 1 மணிக்கு ஆரம்பமாகின்றன.

## உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு கருத்தரங்கு

(நிந்தவூர் சுலைமான் றாபி)

பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நிந்தவூர் விளையாட்டு கழகங்களின் சம்மேளனம் எதிர்வரும் 8ஆம் திகதி நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் பி.ப 3.30 மணியளவில் நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

இம்முறை வெளியான உயர்தர பெறு பேற்றின் அடிப்படையில் மூன்று பாடங்களில் S சித்திகளை பெற்ற மாணவர்கள் கூட பல்கலைகழகத்துக்கு விண்ணப்பிக்க முடியும். அதன் மூலம் சில கற்கை நெறிகளுக்கு தெரிவாகி பல்கலை கழகத்துக்கு செல்ல முடியும். ஆனால் இது தொடர்பான விளக்கங்கள் மாணவர்களிடையே மிக அரிதாக காணப்படுவதால் சில மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட வாய்ப்பு இருந்தும் தவற விட்டு விடுகின்றார்கள்.

எனவே இம்முறை க.பொ.த (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நிந்தவூர் அனைத்து விளையாட்டு கழகங்களின் சம்மேளனம் மாணவர்களைக் கேட்டுள்ளது.

## வலம்புரி கவிதா வட்டத்தின் 34ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 34வது பௌர்ணமி கவியரங்கு எதிர்வரும் 10.ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு-12 அல்-ஹிக்மா கல்லூரி யில் சுடர் ஒளி வார வெளியீடு ஆசிரியர் ராதாமேத்தா தலைமையில் நடைபெறும். இக் கவியரங்கில் கவிதை வாசிக்க விரும்புவோர் தலைவர் நஜ்முல் ஹுசைன் 0714929642 கவிஞர் ஈழகணேஷ் 0717563646 செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் 0777388149 ஆகியோருடன் தொடர்புக் கொள்ளலாம்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

காலி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். அஸாரியா,நிலாமியா,நிஜாமியா ஆகிய இல்லங்களுக்கிடையில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டி 9 மணிக்கு கல்லூரியின் அதிபரும் தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளருமான மதனியா கலீல் தலைமையில் நடைபெறும். இல்ல விளையாட்டுப்போட்டிக்கு பிரதம அதிதியாக காலி வலய கல்விப்பணிப்பாளர் திலக் வத்துஹேவ, கலந்துகொள்ளவுள்ளார்.

## இளைஞர் பாராளுமன்றத்துக்கு ஹஸீப் மரிக்கார் தெரிவு



பேருவளைத் தொகுதி அலகந்துபிடிய இளைஞர் மன்றத்தின் தலைவரும் கட்டட நிர்மாணத்துறைப் பொறியியலாளருமான ஹஸீப் மரிக்கார் இம்முறை இடம்பெற்ற இளைஞர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தர்கா நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பேருவளைத் தொகுதியிலிருந்து இளைஞர் பாராளுமன்றுக்கு தெரிவான முதல் முஸ்லிமாவார். தர்கா நகர் அல்-ஹம்றா மஹா வித்தியாலய பழைய மாணவரான இவர் அமைப்புக்களுடன் இணைந்து பல சமூக சேவைகளை செய்து வருகிறார். சென்ற வருடம் இவருக்கு சமூக சேவைக்கான தேசமான்ய பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தனது பல்கலைக்கழக காலத்தில் களனிப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் தலைவாராக செயற்பட்டதுடன், களனிப் பல்கலைக்கழக முஸ்லிம் பட்டதாரிகள் சங்கத்தினையும் ஸ்தாபித்தார். 10 வருடங்களுக்கு மேலாக செயலிழந்து காணப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் ஒன்றியத்தை மீண்டும் உயிர்பித்து செயல்படுத்த ஆரம்பித்தார். இவர் தர்கா நகர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான அஹ்தர் மரிக்கார், ஹஸீனா ஆகியோரின் புதல்வராவார்.

## காலத்தையும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் பணிகளையும், அபிவிருத்திகளையும் பல்வேறு சவால்களுக்கும், தடங்கல்களுக்கும் மத்தியிலே முன்னெடுக்க வேண்டியுள்ளதாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

என்னதான் தடங்கல் ஏற்பட்டாலும் இறைவன் எம்முடன் இருப்பதால் எடுத்த முயற்சிகளை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்றும் அமைச்சர் சூளுரைத்தார். புத்தளம் ஹிதாயத் நகர் முஸ்லிம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, அதிபர் லாபிர் தலைமையில் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் றிஷாட் மேலும் கூறியதாவது.

புத்தளம் அகதி முகாமில் வாழ்ந்து வடமாகாணத்தில் மீளக்குடியேறிவரும் மக்களினது பிரச்சினைகளிலும் உள்கட்டு மானப்பணிகளிலும் கரிசனை செலுத்தும் அதேவேளை சமாந்தரமாக புத்தளத்தில் வாழும் பெரும்பாலான அகதிமக்களின் தேவைகளையும் கவனிக்க வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றோம். மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் புத்தளத்தில் வாழ்ந்துவரும் அகதி மக்களின் கட்டுமானப்பணிகளையும், வாழ்வியல் தேவைகளையும் மேற்கொள்ளும் போது எத்தகைய சவால்களுக்கு முகங்கொடுத்தோமோ அதேயளவு சவால்களை வடக்கு மீள்குடியேற்றத்திலும் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அத்துடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இனவாதிகளுடன் கைகோர்த்து அவர்களுக்கு தீனிபோடுகின்ற வேதனையான நிலையும் ஏற்பட்டுள்ளது.

எமது முழுநேரத்தையும், காலத்தையும் இப்படியே வீணடித்துவிட்டால் முஸ்லிம் சமுதாயத்துக்கு சேவை செய்யாமல் கால் கட்டுப் போட்டுவிடலாமென இவர்கள் கற்பனை பண்ணுகின்றனர். அவர்களின் இந்தக் கற்பனையானது பகற் கனவாகவே இருக்கும்.

முஸ்லிம் சமூகத்திற்கு இன்று நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை தட்டிக் கேட்பதற்கோ பார்ப்பதற்கோ நமது சமூகத்தில் எவருமில்லாத ஒரு நிலையை நாம் காண்கின்றோம். அதுமட்டுமன்றி சில அரசியல்வாதிகள் மௌனம்காக்கின்றனர். இந்த நிலைகளைக் கடந்து நாங்கள் பணியாற்றும் போது எங்களை இனவாதிகளென சித்தரித்துக் காட்டுகின்றனர். கார்ட்டூன்களிலும் எழுத்துக்களிலும் முஸ்லிம் சமூகத்தை ஒரு மோசமான சமூகமாக சில ஊடகங்கள் திட்டமிட்டு வெளிக்காட்டுகின்றன. முஸ்லிம் பெண்ணொருவர் கோடரி கொண்டு மரத்தை வெட்டுவது போன்று ஒரு காட்சியை வேண்டுமென்றே கார்ட்டூனாக வரைந்து பத்திரிகைகளில் சித்தரிக்கின்றனர். இதுதான் இந்த சமூகத்தின் இன்றய கவலையான நிலையாக இருக்கின்றது.

வடக்கிலேயுள்ள கிட்டத்தட்ட 154 கிராமங்களிலும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும் வித்தியாசமான பிரச்சினைகள் உள்ளன. புதிதாக குடியேற்றப்பட்ட சில கிராமங்கள் தொடர்பில் இனவாதிகள் தொடர்ந்த வழக்குகளுக்கும் நாங்கள் முகங் கொடுக்கின்றோம். உதாரணமாக சன்னார், கங்காணிக்குளம் ஆகிய கிராமங்கள் தொடர்பில் எமக்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுப்பதோடு இலவன்குளம் பாதை திறப்பு தொடர்பிலும் எமக்கு வழக்குண்டு.

மன்னார் மாவட்டத்தில் பூர்வீகக் கிராமமான காக்கையன் குளத்தின் மாதிரிக் கிராமமாக புத்தளத்தில் அமைந்துள்ள ஹிதாயத் நகருக்கும் கடந்த காலங்களில் நாங்கள் பணியாற்றியது போன்று, இன்னும் பல அபிவிருத்திகளை இந்த வருடத்திற்குள் நிறைவேற்றுவதற்கு எண்ணியிருக்கின்றோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## பேரறிஞர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

யுனெஸ்கோ கூரியரின் தமிழ்ப் பதிப்பில் 30ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக அது நிறுத்தப்படும் வரை பணியாற்றினார். இவர் எழுதிய ''இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்'' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 1996 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் தத்துவம், சமயம், அளவியல், அறவியல் எனும் வகைப்பாட்டில் இரண்டாம் பரிசும், இவர் எழுதிய ''மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்'' எனும் நூல் 1996 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில்சிறப்பு வெளியீடுகள் எனும் வகைப்பாட்டில் முதல் பரிசும் பெற்றிருக்கின்றன.

உலகப் புகழ்பெற்ற நூலான, மைக்கல் எச். ஹார்ட் எழுதிய நூறு பேர் என்ற நூலையும் மணவை முஸ்தபா தமிழுக்குக் கொண்டுவந்திருந்தார்.

இவரது இழப்பிற்கு தமிழ்நாட்டின் திமுக, மதிமுக, பாமக, விடுதலை சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் இரங்கல் தெரிவித்துள்ளன. இவரது ஜனாஸா இன்று நண்பகல் 12 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

## ஆப்கான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

போக்குவரத்து, மக்களின் அன்றாட வாழ்வும் பாதிப்படைந்துள்ளது.

மத்திய ஆப்கான் மாகாணத்தில் பனிப்பொழிவு மற்றும் சரிவுகள் காரணமாக 54 பேர் உயிரிழந்துள்ளதோடு, 168 வீடுகள் மூடுண்டுள்ளதால் நூற்றுக்கணக்கான கால்நடைகளும் கொல்லப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் பெண்களும் குழந்தைகளுமாகும். மேலும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக மீட்புப் பணிகளையும் முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும் இதனால் உயிரிழப்பு வீதம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் இருந்த மக்கள் விமானங்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

## தபால் விவகார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காலத்தில் தீர்வொன்று கிடைக்காத போது தொடர் வேலை நிறுத்தமொன்றுக்கு செல்ல நேரிடும் என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களின் முன்னணியின் அமைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் தபால் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தின் போது தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம், பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைச்சரவைப் பத்திரமொன்று வெளியிடுவதற்கு வாக்களித்ததாகவும், இதுவரையில் அதுதொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

2006 சுற்றுநிருபத்தில் உள்ள ஊழியர்களை இணைத்துக்கொள்ளும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல், தபால் சேவை சம்பள முரண்பாடுகளை சீர்செய்தல், பதவியுயர்வு முரண்பாடுகளை தீர்த்தல், தபால் சேவையில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் போன்ற 14 விடயங்களில் சிலவற்றிற்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் வாக்களித்திருந்தார். அவற்றுக்கான தீர்வாக அமைச்சரவைப் பத்திரமொன்றும் பெற்றுத் தருவதாக கூறினார். எனினும் தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அமைச்சருக்கு மேலும் இரண்டு வார கால அவகாசம் வழங்குகின்றோம். எமக்கான தீர்வு, நியாயம் முன்வைக்கப்படாதபோது, தொழிற்சங்க வேலைநிறுத்தமொன்று குறித்து தீர்மானிக்கவுள்ளோம்.- என்றார்.

## மேல் மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேல் மாகாண ஆளுனர் அலுவலகம் காட்டும் அசமந்தப் போக்கு குறித்து கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் ஆளுனர் யோகேஸ்வரனைச் சந்தித்துரையாடிய போதே ஆளுனர் இருவார விடுமுறை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

உம்ரா செல்லும் சில ஆசிரியர்கள் ஒரு மாத காலத்திற்கு விண்ணப்பிப்பதனால் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதாக ஆளுனர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில வலயக்கல்விப் பணிப்பாளர்கள் சிபாரிசு செய்யாதிருப்பது குறித்தும் முஜிபுர் ரஹ்மான் ஆளுனரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

எதிர்காலத்தில் உம்ராவுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு 15நாள் விடுமுறையை வழங்குவதற்கு ஆளுனர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் தெரிவித்தார்.

## மின்னேரிய சு.க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதவியில் இருந்து விலகிக்கொள்ள தீர்மானித்துள்ளார்.

அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாக குறிப்பிட்டே கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து விலகிக்கொண்டாலும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தீவிர செயற்பாட்டாளராக தொடர்ந்தும் செயற்பட இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மின்னேரிய தொகுதி அமைப்பாளராக செயற்பட்ட இவர், எதிர்வரும் காலங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்தில் கட்சியை வெற்றிபெறச் செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# அலரி மாளிகையில் சமல் ராஜபக்ஷ



ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் முதலீட்டு வலயங்கள் தொடர்பில் நடைபெற்ற விஷேட கலந்துரையாடலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமனற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார். இந்த கலந்துரையாடல் நேற்று காலை அலரிமாளிகையில் இடம் பெற்றது. அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ, மகிந்த அமரவீர, மலிக் சமரவிக்ரம ஆகியோர் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைந்துள்ள ஸ்ரீ வஜிர சர்மா பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தெடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். இதற்கு பல்வேறு நிறுவனங்கள் சாட்சியமளித்துள்ளன. இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடியால் 1000 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளமைக்கான சான்று எம்மிடமும் உள்ளமையால் எமது சாட்சியங்களையும் இந்த ஆணைக்குழு பெற்றுக்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மத்தியவங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடியினால் முழு பொருளாதாரத்துக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் ஆராய்ந்த போதே இவ்வாறு ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்பதை நாம் கண்டறிந்தோம்.

இந்த மோசடியின் பின்னர் மத்திய வங்கியில் பல்வேறு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக் மத்தியவங்கியின் முன்னாள ஆளுனர் அர்ஜுன மகேந்திரனின் வெளிநாட்டு பயணங்கள் குறித்த கணக்காய்வு அறிக்கைகள் தற்போது கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் அந்த வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பாக கணக்காய்வு பிரிவிற்கு சமரப்பிக்கப்பட்ட தரவுகளில் 163 குற்றங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இவற்றினால் மத்திய வங்கிக்கு 66,280,616 ரூபா நஷ்டம் எற்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

மத்தியவங்கியின் முன்னாள் ஆளுனர் அரஜுன மகேந்திரன் தனது உத்தியோக பூர்வ வெளிநாட்டு விஜயங்களின் போது தனது மட்டும் உதவிக்காக அதிகளவிலான ஆட்களை கூட்டிச்சென்றுள்ளார். அத்தோடு, உத்தியோகபூர்வ விஜயத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட அதிகமாகவே அவர் செலவளித்துள்ளார். அதுமட்டுமல்லாது தனிப்பட்ட செலவுகளை மத்திய வங்கியின் மீது சுமத்தியுள்ளதாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி இந்திய தலைநகர் டெல்லியில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டமொன்றிற்கு சென்றிருந்த ஆளுனர் அர்ஜுன மகேந்திரன், ஒரே தினத்தில் டெல்லியில் மூன்று வேறுபட்ட நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்ததாகக் கூறி அதற்கான பற்றுச்சீட்டுக்களையும் வழங்கியுள்ளார். இந்த முன்;று ஹோட்டல்களில் தங்குவதற்கு 5 இலட்சத்து 40ஆயிரம் ரூபா செலவாகியுள்ளதாக கணக்கும் காண்பிக்கப்பட்டுள்ளது. தனிநபரொருவர் ஒரே தினத்தில் மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் தங்குவதங்கான அவசியமென்ன? அது எவ்வாறு சாத்தியப்படும்?

அத்தோடு, 2016 ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் டுபாய் ஹோட்டலில் தங்கியதற்கான பற்றுச்சீட்டுகள் கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 2016 ஏப்ரல் 12ஆம் திகதியன்று தான் அர்ஜுன மகேந்திரன் டுபாய் நாட்டுக்கே பயணமாகியுள்ளார். இதுபோல மத்திய வங்கி ஆளுனராக அவர் இருந்த 17 மாத காலப்பகுதியில் அவரது உத்தியோக பூர்வ வெளிநாட்டு பயணங்களில் மட்டும் 163 நிதிக்குற்றங்கள் இடம் பெற்றதாக கணக்காய்வு பிரிவு தெரிவிக்கின்றது. இது தொடர்பில் எல்லாம் அரசு என்ன நடவடிக்கையை எடுக்கப்போகின்றது என்றார்.

## மீண்டும் பயங்கரவாத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைதூக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்தோடு, வடக்கில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இக்கருத்தினை முன்வைத்தார். இதுவிடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மீண்டும் பயங்கரவாதத்தை தோற்றுவிக்கும் முகமாக செயற்பட்டனர் எனும் குற்றத்துக்காக கடந்த மாதம் 13 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து சக்திவாய்ந்த வெடிப் பொருட்களும் மீட்கப்பட்டன.

நாம் பயங்கரவாதம் தொடர்பில் தொடர்ந்தும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறோம். ஆனால், இதற்கெல்லாம் பொறுப்பான இருக்கும் அமைச்சர் சாகல ரத்னாயக்க இதுவிடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுக்கு எந்தவொரு தகவல்களையும் வெளியிட்டு வருவதில்லை என்றே தெரிகின்றது.

அவர் சரியாக தகவல்களை வழங்கியிருந்தால் வடக்கில் பாதுகாப்புக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ருவான் விஜேவர்த்தன குறிப்பிட்டிருக்க மாட்டார். நாட்டில் பயங்கரவாதம் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக தலைதூக்குகிறது. எனவே, வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் என்னதான் அழுத்தங்களைக் கொடுத்தாலும் அங்கிருந்து ஒருபோதும் இராணுவத்தை அரசு அகற்றிவிடக் கூடாது.

புனர்வாழ்வுப் பெற்றவர்கள் மீண்டும் பயங்கரவாதச் செயற்பாடுகளின் ஈடுபட்டால், இவர்கள் மீது மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படும்?

அத்தோடு, தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரனின் உயிருக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் இந்நிலையில், நாம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். புலிகளை இல்லாதொழித்து அவர்களின் தனியீழக் கனவுக்கு முற்றுப்புள்ளி வைத்த இவருக்கு உரிய பாதுகாப்பினை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார்.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவப் பீட மாணவர்கள் உள்ளிட்ட பெரும்பான்மையான தரப்பினரை பெரும் அதிர்ச்சியடையச் செய்த மேற்படி இத்தீர்ப்பினைத் தொடர்ந்து, இதற்கெதிரான போராட்டங்களும் இது தொடர்பிலான பேச்சுக்களும் இடம் பெற்றன.

இந்நிலையில், இவ்விடயம் குறித்து அரச வைத்திய சேவை சங்கத் தலைவர் அநுருத்த பாதணிய, பேச்சாளர் நவின் டி சொய்சா ஆகியோர் நேற்றைய தினம் ஜே.வி.பியினருடன் கலந்துரையாடினர்.

இதன்போது, நோயாளர்களின் உரிமையை பாதுகாக்க வேண்டியமை அரசின் பாரிய பொறுப்பாக இருந்துவருகின்றனது. ஆனால், அந்த கடமையிலிருந்து அரசு தற்போது தவறியுள்ளது. எனவேதான், இதுவிடயம் தொடர்பில் நாம் ஜே.வி.பியினருடன் இன்றைய தினம் (நேற்று) முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டோம் என்று ஜி.எம்.ஓ.ஏ. தலைவரான அநுருத்த பாதணிய கருத்து வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கையில்,

சைட்டம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் நாம் தீர்க்கமாக கலந்துரையாடினோம். இது நாட்டின் பாரியதொரு பிரச்சினையாகவே கருதப்படுகின்றது. உண்மையில் இந்த கல்வி நிறுவனமானது நாட்டின் வைத்திய சேவைக்கும் அதனை நம்பியுள்ள நோயாளர்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாவே இருந்து வருகின்றது.

ஆகவே, இதற்கு எதிர்ப்பினை தெரிவிக்கும்பொருட்டு நாமும் அரச வைத்திய சேவைகள் சங்கத்தினரும் இணைந்து செயற்படவுள்ளோம் என்றார்.

## ஏப்ரல் மாதத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பார்த்தப் பின்னர் இவ்வருட ஆரம்பத்தில் அமைச்சரவையின் மாற்றங்கள் நிகழும் என்று அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்படி மாற்றத்துக்கு பிரதமர் இணங்காத காரணத்தினாலேயே இந்த கால நீடிப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி இருந்தபோது மேற்படி மூவரும் தான் பக்கபலமாக இருந்தார்கள். அத்தோடு, சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையிலும் நிதி, சட்டம் மற்றும் ஒழுங்கு, பெருந்தெருக்கள் மற்றும் உயர்க்கல்வி ஆகிய மூன்று அமைச்சுக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்க வேண்டும் என்றே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, அமைச்சுப் பதவியில் இருந்து இவர்களை நீக்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது என அறியக்கிடைத்துள்ளது.

அதேநேரம், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அமைச்சை பிரதமரின் கீழ் கொண்டு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியினராலேயே தற்போது வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் புதுத்தகவலொன்று வெளியாகியுள்ளது. அதாவது நிதியமைச்சை பிரதமருக்கு கீழ் கொண்டுவந்து, ஹெரான் விக்கிரமரத்னவை பிரதி நிதி அமைச்சராகவும் ரவிகருணாநாயக்கவை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சராக நியமிக்குமாறும் தற்போழுது பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சராக உள்ள சந்திம வீரக்கொடிக்கு காணி அமைச்சை வழங்குமாறும் ஐ.தே.கவினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியக்கிடைத்துள்ளது.

எனினும், இதுதொடர்பில் இன்னும் இறுதி முடிவொன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடம் எடுக்காத காரணத்தினாலேயே இது உள்ளிட்ட ஏனைய மாற்றங்கள் தொடர்பில் ஏப்ரலுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என்று அரச தரப்பு குறிப்பிட்டுள்ளது.

## வீசா தடை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

7 முஸ்லிம் நாடுகளுக்கு 'விசா' வழங்குவதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பித்தார். மேலும், அகதிகள் அமெரிக்காவில் நுழைய 4 மாத தடையும், சிரியா அகதிகளுக்கு ஒட்டுமொத்த தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு அமெரிக்கா மட்டுமின்றி சர்வதேச நாடுகளில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. முஸ்லிம் நாடுகளை குறிவைத்து தடை விதித்துள்ள டிரம்புக்கு எதிராக அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. வழக்குகளும் போடப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த சியாட்டிலில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் ரொபர்ட், டிரம்ப் உத்தரவுக்கு நாடு முழுவதும் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். இது ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகத்துக்கு பின்னடைவாக கருதப்பட்டது.

இந்நிலையில், நீதிமன்ற தடை உத்தரவை எதிர்த்து அமெரிக்க அரசின் நீதித்துறை தரப்பில் சான் பிரான்சிஸ்கோ மேன்முறையீடு நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்புக்காகத்தான் 'விசா' வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே அவசர வழக்காக விசாரித்து தடையை உடனே நீக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழ்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அமெரிக்க அரசின் தலைமை வழக்கறிஞர் வாதாடியபோது,

''அமெரிக்காவுக்குள் யார் நுழைய வேண்டும்; யார் நுழையக் கூடாது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம், ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது'' என்று வாதிட்டார். ஆனால், இதை நீதிபதி ஏற்கவில்லை. மேலும், நீதித்துறையின் அப்பீலை ஏற்று உடனடியாக தடையை நீக்க மறுத்துவிட்டார்.

மேலும், 'விசா' தடையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளவர்கள் தங்கள் தரப்பு விவாதத்தை முன்வைக்க வேண்டும் அவர் உத்தரவிட்டார்.

தடையை நீக்கி வெற்றி பெறுவோம் 'விசா' விவகாரத்தில் நீதிபதியை தாக்கி பேசிய அதிபர் டிரம்ப்,

''நீதிபதி என கூறிக்கொள்பவரின் கருத்து கேலிக்குரியதாகவுள்ளது. தீவிரவாதிகளும் மற்றவர்களும் நம் நாட்டில் சுதந்திரமாக நுழைய நீதிபதி வழி செய்து விட்டார். இதனால் கெட்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தடையை எதிர்த்து அரசு தரப்பில் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டில் வெற்றி பெறுவோம். இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது'' என தெரிவித்துள்ளார்.

நவமணி



Sports விளையாட்டுச் செய்திகள்

அவுஸ்திரேலியாவுடனான டி20 தொடர்:

# தலைமைப்பதவி தரங்கவுக்கு மாலிங்கவுக்கு வாய்ப்பு கிட்டுமா?




பீ.எப்.எம் றிஷாட்

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இம் மாதம் நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச டி20 கிரிக்கெட் தொடரில் வழமையான அணித் தலைவர் எஞ்சலோ மெத்யூஸ் விளையாடமாட்டார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஜொஹானெஸ்பேர்கில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச டி20 போட்டியில் அவசரமாக ஓட்டம் ஒன்றைப் பெற முற்பட்டபோது மெத்யூஸ் உபாதைக்குள்ளானதுடன், தொடரிலிருந்து விலகி நாடு திரும்பினார். இந்நிலையில், மெத்யூஸ் பூரண குணமடைவதற்கு இன்னும் 3 வாரங்கள் தேவைப்படும் என வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதால் அவுஸ்திரேலியாவுடனான டி20 தொடரில் விளையாடமாட்டார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

இந் நிலையில் அவுஸ்திரேலியாவுக்கான இருபது 20 கிரிக்கெட் விஜயத்தின் போது உபுல் தரங்க அணித் தலைவராக செயற்படுவார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது. எனினும், தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி டி20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணித் தலைவராக தினேஷ் சந்திமால் விளையாடிய போதிலும், ஒருநாள் போட்டிகளில் அவர் தொடர்ந்து மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற காரணத்தால் சர்வதேச ஒருநாள் தொடரில் உபுல் தரங்கவுக்கு தலைமைப் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, முழங்கால் உபாதையின் காரணமாக நீண்ட நாட்களாக அவதிப்பட்டு வந்த மாலிங்க, கடந்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற ஆசிய கிண்ண தொடரின் பின்னர் அவர் எந்தவித சர்வதேச போட்டிகளிலும் விளையாடவில்லை. எனினும், கடந்த வருட இறுதிப் பகுதியில் அவர் சர்வதேச போட்டிகளில் மீண்டும் இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த மாதம் துரதிஷ்டவமாக டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டார். இதன்காரணமாக, மாலிங்கவுக்கு தென்னாபிரிக்க அணியுடனான டி20 தொடரில் விளையாடுவதற்கு முடியாமல் போனது. எனினும், மாலிங்கவின் உபாதை தொடர்பில் சிகிச்சையளித்தும் வருகின்ற இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வைத்திய குழுவின் உறுப்பினரான வைத்திய அதிகாரி அர்ஜுன த சில்வா இதுதொடர்பில் கருத்து வெளியிடுகையில்,மாலிங்க தற்போது பூரண குணமடைந்துள்ளார்.எனவே அவுஸ்திரேலியாவுடனான டி20 தொடரில் மாலிங்க விளையாடுவது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் தெரிவுக்குழுவினர்தான் முடிவு செய்ய வேண்டும் என்றார். எனவே இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான டி20 தொடரில் மாலிங்க அணியில் இடம்பெறலாம் எனவும், அணியின் தலைமைப்பதவி மாலிங்கவுக்கு வழங்கப்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.இந்நிலையில் அவுஸ்திரேலிய தொடருக்கான இலங்கை அணியின் தெரிவு இன்று நடைபெறவுள்ள நிலையில், தென்னாபிரிக்க தொடரில் இடம்பெற்ற தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா மற்றும் சுரங்க லக்மால் ஆகிய வீரர்களை நீக்கி சாமர கபுகெதர மற்றும் ஷெஹான் ஜயசூரிய ஆகிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக கிரிக்கெட் நிறுவன வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2017 உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட்:

# தகுதிகாண் போட்டிகள் இன்று கொழும்பில் ஆரம்பம்



பீ.எப்.எம் றிஷாட்

2017ஆம் ஆண்டு ஜுன் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சியின் மகளிர் ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கு முன் இடம்பெறவுள்ள 4ஆவது மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தகுதிகாண் போட்டிகள் இன்று முதல் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளன.எதிர்வரும் 21ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 10 அணிகள் இரு குழுக்களாக போட்டியிடவுள்ளதுடன், தெரிவு செய்யப்படும் இறுதி 4 அணிகள் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு நேரடியாகப் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவுள்ளன. இதன்படி, முன்னாள் உலகக்கிண்ண சம்பியனும், ஆசியாவின் நடப்புச் சம்பியனுமான இந்தியா, இலங்கை,அயர்லாந்து,தாய்லாந்து,மற்றும் சிம்பாப்வே மகளிர் அணிகள் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ளதுடன், பி பிரிவில் பாகிஸ்தான்,தென்னாபிரிக்கா,பங்களாதேஷ்,பப்புவா நியூகினியா, ஸ்கொட்லாந்து ஆகிய மகளிர் அணிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டித் தொடரின் முதல் நாளான இன்று 4 போட்டிகள் நடைபெறவுள்ளன.இதன்படி, ஏ பிரிவில் இலங்கை மற்றும் இந்தியா, சிம்பாப்வே மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியும், பி பிரிவில் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பப்புவா நியூகினியா அணிகளுக்கிடையிலான போட்டியும் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், குழுநிலைப் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் தலா 4 போட்டிகளில் விளையாட வேண்டும். 30 போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதல் சுற்றுப்போட்டிகளின் வெற்றி தோல்விகளின் மூலம் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைவாக தத்தமது குழுக்களில் முன்னிலை பெறும் முதல் மூன்று அணிகளும் சுப்பர் சிக்ஸ் (Super Six) நிலை போட்டிகளுக்கு தகுதி பெறும். அவ்வணிகளில் இருந்து, நான்கு அணிகள் அரை இறுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு, அதில் இருந்து இரு அணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி க. சரவணமுத்து மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் விளையாட இருக்கின்றன. அத்துடன் இத்தொடரில் முதல் 4 இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சியின் மகளிர் உலகக்கிண்ண போட்டிகளுக்குத் தகுதியைப் பெற்றுக்கொள்ளும். இப்போட்டிகள் அனைத்தும் கொழும்பு பி.சரவணமுத்து மைதானம், மோர்கன்டைல் மைதானம், நொன்திஸ்கிரிப்ட் மைதானம் மற்றும் கொழும்பு கிரிக்கெட் கழக மைதானங்களில் நடைபெறவுள்ளது. எனினும், உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டிகளுக்கு நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணிகள் இதுவரை தகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வார ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று காலை ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற நடைபவனியிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். அதற்கிணைவாக அனைத்து அரச நிறுவனங்களிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன. நலம், மகிழ்ச்சி, வெற்றிக்காக விளையாட்டு என்பது இம்முறை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வாரத்தின் வாசகமாகும். இவ்வாரத்தில் இவ்விடயம் தொடர்பான கருத்தாடல்கள், வெளியீடுகள்,விரிவுரைகள், பதாதைகளை காட்சிப்படுத்தல் போன்றசெயற்பாடுகள் ஊடாக மக்கள் தெளிவூட்டப்படவுள்ளனர். விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பிரதியமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் டி.எம்.ஆர்.பீ.திஸாநாயக்க ஆகியோரும் ஜனாதிபதி செயலக சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள்.

# ஐ.எஸ். இயக்கத்தில் சேர்க்க அகதி குழந்தைகள் கடத்தல்



ஐ.எஸ். இயக்கத்தில் சேர்ப்பதற்காக அகதி குழந்தைகள் கடத்தப்பட்டுவருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் வேரூன்றி உள்ளது. அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட உலக நாடுகள் தீவிரமாக உள்ளன.

எனவே, தங்கள் இயக்கத்தை பலப்படுத்த புதிய ஆட்களை சேர்த்து வருகின்றனர். அதற்காக அகதிகள் முகாம்களிலிருக்கும் குழந்தைகள் கடத்தி வரப்படுகின்றனர்.

இவர்கள் லெபனான் மற்றும் ஜோர்தான் அகதிகள் முகாம்களிலிருந்து கடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது. குழந்தைகளை கடத்தி வருபவர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது.

மேலும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். இதுவரை 88,300 குழந்தைகள் மாயமாகி இருப்பதாக ஐரோப்பிய யூனியன் பொலிஸ் அமைப்பான 'யூரோபால்' தெரிவித்துள்ளது.

அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு உணவு வழங்குவது போன்று ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் 'ஸ்லீப்பர் செல்' பிரிவினர் ஈடுபட்டு அங்கு இருக்கும் குழந்தைகளை கடத்துவதாக தெரிகிறது. இத்தகவலை தீவிரவாதத்துக்கு எதிரான அமைப்பு வெளியிட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# நேபாளில் மீண்டும் நிலநடுக்கம்



நேபாளத்தில் 4.4 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேபாளத்தில் கடந்த 2015 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 9,000 பேர் உயிரிழந்தனர். நாடு முழுவதும் பல்வேறு கட்டிடங்கள், வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. அதைத் தொடர்ந்து, நில அதிர்வுகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. இந் நிலையில், 476 ஆவது முறையாக நேற்றுமுன்தினமும் தலைநகர் காத்மாண்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டன.

இந்நிலநடுக்கத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. கடந்தாண்டு நவம்பர் 28ஆம் திகதிக்கு பின்னர், 68 நாட் கழித்து இந்த நில அதிர்வு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தின் 21ஆவது முதல்வராகிறார் சசி

## இன்று ஆளுநருடன் சந்திப்பு; நாளை மறுதினம் பதவியேற்பு

அ.தி.மு.க சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள சசிகலா இன்று ஆளுநர் வித்யாசாகர்ராவை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளார். அப்போது புதிதாக பதவி ஏற்கும் அமைச்சரவை பட்டியலையும் ஆளுநரிடம் கையளிக்கவுள்ளார்.

இதன்படி தமிழகத்தின் ஆட்சியில் 21ஆவது முதலமைச்சராகவும் 3ஆவது பெண் முதலமைச்சராகவும் சசிகலா விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சசிகலா சட்டமன்ற கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பெயரை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முன்மொழிய அனைத்து எம்.எல்.ஏ.க்களும் வழிமொழிந்தனர்.

அவர் முதல்-அமைச்சராக பதவி ஏற்க வசதியாக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது பதவியை இராஜினாமா செய்தார். அவரது அமைச்சரவையும் பதவி விலகியது. இராஜினாமா கடிதங்கள் ஆளுநர் வித்யாசாகர் ராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் இன்று அளுநர் வித்யாசாகர்ராவை கிண்டி ஆளுநர் மாளிகையில் சந்திக்கவுள்ள சசிகலா, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சட்டமன்ற கட்சி தலைவராகதான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தையும் புதிதாக பதவியேற்கும் அமைச்சரவை பட்டியலையும் ஆளுநரிடம் கையளிக்கவுள்ளார்.

இந்நிலையில் தமிழக முதலமைச்சராக நாளை மறுதினம் 9ஆம் திகதி பதவி ஏற்கிறார். அன்று பகலில் பதவியேற்பு விழா நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விழாவை ஆடம்பரம் இல்லாமல் எளிமையான முறை ஆளுநர் மாளிகையிலேயே நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. சசிகலாவுக்கு ஆளுநர் வித்யாசாகர் ராவ் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். தொடர்ந்து புதிய அமைச்சர்கள் பதவி ஏற்கவுள்ளனர்.

# 'ஜெ' மரணத்தில் மர்மமில்லை மனம் திறக்கும் மருத்துவர்கள்

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மமிருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் இதுகுறித்து அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

லண்டன் மருத்துவர் ரிச்சர் பீலே தெரிவிக்கையில், "மருத்துவ முறைகளுக்குட்பட்டே ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கடுமையான சுவாச பிரச்சினை ஏற்பட்டிருந்ததோடு இரத்தத்திலும் தொற்று ஏற்பட்டிருந்தது. இதனால் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்கும்போது பல்வேறு உறுப்புகள் செயலிழக்க தொடங்கின.

செப்சிஸ் போன்ற தோற்று ஓரிரு நாளில் திடீரென ஏற்பட வாய்ப்புள்ளது. சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு ஆகியவை ஜெயலலிதாவுக்கு இருந்ததால் செப்சிஸ் நோய் வேகமாக பரவியது. காய்ச்சலுக்காக ஜெயலலிதா சேர்க்கப்பட்ட போதே கடுமையான சர்க்கரை நோய், மற்றும் சிறுநீரக பாதிப்பு இருந்தது. இருப்பினும் தொடக்கத்தில் அவர் சுயநினைவுடனே இருந்தார்.

இதனிடையே கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த லண்டன் மருத்துவர் நோயாளிகளை புகைப்படம் எடுத்து வெளியிடுவது வழக்கம் அல்ல எனத் தெரிவித்தார். இதேபோல் நான் சிகிச்சையை தொடங்கிய போது ஜெயலலிதா என்னிடம் பேசினார் . மேலும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முதல் 10 நாட்கள் விழிப்புடன் இருந்தார். உடல்நலம் தேறிவந்த போது ஜெயலலிதாவுக்கு திடீரென பின்னடைவு ஏற்பட்டது என்றும் ரிச்சர்ட் பீலே தெரிவித்தார்.

உயர்தர சிகிச்சைகள் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது என அப்பல்லோ மருத்துவர்கள் விளக்கமளித்தனர்.

இதனிடையே கேள்வியொன்றுக்கு பதிலளித்த அப்பலோ மருத்துவர் பிரபு ஒக்டோபர் 27ஆம் திகதி தேர்தல் வேட்பு மனுவில் ஜெயலலிதா கைரேகை வைத்தார் எனத் தெரிவித்தார். ஜெயலலிதா கையெழுத்திடாத நிலையில் பெருவிரல் ரேகை வைத்தார் எனவும் மருத்துவர் பிரபு தெரிவித்தார்.



**உடல் பதப்படுத்தப்பட்டது**

இது குறித்து பதிலளித்த மருத்துவர் சுதா ஜெயலலிதா மரணமடைந்த பிறகு (டிசம்பர் 5ஆம் திகதி இரவு 12.20 மணியளவில்) அவரது உடல் பதப்படுத்தப்பட்டது. மேலும் உடலை பதப்படுத்த ஐந்தரை லீற்றர் திரவம் அவருக்குள் செலுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.



**கால்கள் அகற்றப்படவில்லை**

ஜெயலலிதாவின் கால்கள் அகற்றப்படவில்லை. மேலும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையும் ஜெயலலிதாவுக்கு மேற்கொள்ளவில்லை என மருத்துவர் பாலாஜி தெரிவித்தார்.

**சி.சி.டிவி கெமரா இல்லை**

ஜெயலலிதா சிகிச்சை பெற்று வந்த அறையில் சி.சி.டிவி கெமரா இல்லை என மருத்துவர் ரிச்சர்டு பீலே தெரிவித்தார். சி.சி.டிவி கெமரா இல்லாததால் சிகிச்சை பதிவுகளை வெளியிட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

**ஆளுநர் பார்த்தார்**

ஜெயலலிதாவை அறையின் வெளியேயுள்ள கண்ணாடி மூலம் ஆளுநர் வித்யாசாகர் ராவ் பார்த்தார். அறைக்கு வெளியிலிருந்து சைகை மூலம் அவர் முதல்வருடன் பேசினார். இருப்பினும் 2வது முறை சென்றபோது ஆளுநர் ஜெயலலிதாவை பார்க்கவில்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**சசிகலா தகவல் தெரிவிக்கப்பட்டது**

ஜெயலலிதாவுக்கு தரப்படும் சிகிச்சைகள் குறித்து சசிகலாவிடம் நாள்தோறும் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் தலைமைச்செயலாளர், சுகாதாரத்துறை செயலாளரிடமும் ஜெயலலிதாவின் சிகிச்சை குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**அரசு சார்பில் செய்தியாளர் சந்திப்பு**

அரசு சார்பில் தான் செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என லண்டன் மருத்துவர் ரிச்சர்டு பீலே தெரிவித்தார்.

**ஜெயலலிதாவுக்கு உடல் புண்**

நீண்ட நாட்கள் படுக்கையில் இருந்ததால் ஜெயலலிதாவுக்கு உடல் புண் ஏற்பட்டது. 75 நாட்களாக படுக்கையில் இருந்ததால் அவருக்கு உடல் புண் ஏற்பட்டது என மருத்துவர்கள் தகவல் தெரிவித்தனர்.

**மாரடைப்பை கணிக்க இயலாது**

மாரடைப்பு வருவதற்கான காரணத்தை கணிக்க இயலாது. மாரடைப்பு ஏற்பட்ட பிறகு சிறிது கூட இதயத்துடிப்பு இல்லாமல் ஜெயலலிதா உயிரிழந்தார். மேலும் ஜெயலலிதாவை காப்பற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு ஏற்பட்ட போது மருத்துவர் ரமேஷ் அவரது அறையில் இருந்தார். மாரடைப்புக்கு அவரது அறையிலேயே எக்மோ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**சிகிச்சை செலவு ரூ.5.5 கோடி**

ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட செலவு ரூ.5.5 கோடி. இதனை அவரது குடும்பத்தினர் செலுத்தினர் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 07TH FEBRUARY 2017